# போக்குவரத்துத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2021–2022

## மானியக் கோரிக்கை எண். 48


# ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்
## போக்குவரத்துத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2021

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் | 8 |
| 3. | தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் | 61 |
| 4. | சாலை போக்குவரத்து நிறுவனம் | 70 |
| 5. | பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு | 79 |
| 6. | தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை | 80 |
| 7. | துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு | 87 |
| 8. | சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் | 105 |
| 9. | முடிவுரை | 114 |

# போக்குவரத்துத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2021-2022

## அத்தியாயம்-1

### 1.1 முன்னுரை:

இந்தியாவிலேயே மிகவும் வளர்ச்சியடைந்த மாநிலங்களுள் ஒன்றாக விளங்கும் தமிழ்நாட்டின் வளர்ச்சி, பொதுப் போக்குவரத்து அமைப்பின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மக்களுக்கான சேவை, வேலைவாய்ப்பு, கல்வி, மருத்துவ பராமரிப்பு, சந்தைக்கு செல்லுதல், சமூக மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள், நகரங்கள் / பெருநகரங்கள் போன்றவற்றின் விவசாயப் பொருட்களை விற்பனை செய்தல் / வாங்குதல் ஆகியவற்றிற்கு பொதுப் போக்குவரத்து சேவை புரிகிறது. மேலும், பொதுப் போக்குவரத்து என்பது பொது மக்களின் வசதிக்காக நிர்ணயிக்கப்பட்ட வழித்தடங்களில், ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மக்கள் பயணம் மேற்கொள்வதற்கு உகந்த திறமையான மற்றும் நன்மை பயக்கும் அமைப்பாகத் தொடர்கிறது.

பேருந்து போக்குவரத்து என்பது உள்ளூர், நகர பகுதி, கிராமப் பகுதி, நகரங்களுக்கு இடையே மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான பகுதிகளுக்கு மக்கள் செல்வதற்கு வசதி செய்வதை இலக்காகக் கொண்ட பொதுவான போக்குவரத்து முறையாகும். சிறந்த போக்குவரத்தானது பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு முக்கிய ஊக்கமாகவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் காரணமாக அமைகிறது. எனவே, பேருந்து போக்குவரத்து அமைப்பின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு தொலைநோக்கு பார்வை தேவைப்படுகிறது.

- பேருந்து போக்குவரத்தானது சூழலுக்கு உகந்த, நம்பகமான, திறமையான, குறைந்த கட்டணம் மற்றும் கடைக்கோடி மக்களுக்கும் பேருந்து வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதாகும்.
- நகரங்கள், கிராமப்புறங்கள், நீண்டதூர பயணங்கள் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான போக்குவரத்து வசதிகளை பொது மக்களுக்கு உறுதிசெய்தல்.
- மாற்றுத் திறனாளிகள் எளிதில் பயணிக்கக்கூடிய பேருந்துகளை அறிமுகம் செய்தல்.

- மின்சார பேருந்துகள், அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு மற்றும் திரவநிலை இயற்கை எரிவாயு போன்ற மாற்று எரிபொருளுடன் கூடிய பேருந்துகளை பொது மக்கள் பயணிக்கும் வகையில் வழங்குதல்.

## 1.2 தமிழ்நாட்டில் பொதுப் போக்குவரத்து

நகரங்கள் மற்றும் கிராமப்புற மக்களின் வேலை, கல்வி, பொழுதுபோக்கு மற்றும் பிற தேவைகளுக்கு திறமையான, பாதுகாப்பான, வசதியான, நம்பகமான, நிலையான மற்றும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய கட்டணத்தில் போக்குவரத்து சேவை வழங்குவதில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது. மாநிலத்தின் பிற பகுதிகள் நம்பகமான சாலை போக்குவரத்து இணைப்பின் மூலம் ஒன்றுடன் ஒன்று நன்கு இணைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவிலுள்ள அரசு போக்குவரத்துக் கழகங்களுள் தமிழக அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் முன்னோடியாகத் திகழ்கிறது. அரசு போக்குவரத்துக் கழகங்களின் மூலம் தினமும் சுமார் 1.3142 கோடி பயணிகள் பயணம் மேற்கொண்டனர் மற்றும்

அனைத்து வகையான சலுகை கட்டணத்தில் பயணம் செய்பவர்களையும் சேர்த்து சுமார் 1.7 கோடி பயணிகள் 2019-2020-ஆம் ஆண்டில் பயணம் மேற்கொண்டனர். கொரோனா பெருந்தொற்று காரணமாக 2020-2021-ஆம் ஆண்டில் 0.7 கோடியாக தற்காலிகமாக குறைந்து, மீண்டும் 2021-2022-ஆம் ஆண்டில் பொதுப் போக்குவரத்தினை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 0.76 கோடியாக (ஜூலை 2021 வரை) உயர்ந்துள்ளது.


தமிழக அரசின் தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றும் நோக்கத்துடன், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் எதிர்காலத்தில் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொதுப் பேருந்து போக்குவரத்தினை மேம்படுத்திட KfW (ஜெர்மனி மேம்பாட்டு வங்கியின்) நிதியுதவியுடன் மின்சார பேருந்துகளை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பெண்கள் சமூகத்தோடு ஒன்றிணைவதை எளிதாக்கும் நோக்கத்துடன், அனைத்து பெண் பயணிகளுக்கும் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் மூலம் இயக்கப்படும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் (வெள்ளைப் பலகை) மட்டும் இலவசமாக

பயணிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்திற்காக தமிழகம் முழுவதும் 7,312 சாதாரண நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்கள் 12.07.2021 முதல் கணக்கெடுப்பு நோக்கங்களுக்காக பூஜ்ஜிய மதிப்பு பயணச் சீட்டுகளை பெண் பயணிகளுக்கு வழங்குகின்றன. 12.07.2021 முதல் 26.08.2021 வரை 1,463.15 இலட்சம் பெண் பயணிகள் பயணம் மேற்கொண்டுள்ளனர், இது சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் மொத்த பயணிகளில் சுமார் 60.70% ஆகும். இந்த இலவச பயண வசதி திருநங்கைகள் மற்றும் 40% மற்றும் அதற்கு மேலுள்ள மாற்றுத் திறனாளிகளின் துணையாளர் ஆகியோருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. திருக்குறளின் நெறிகளை பரப்புவதற்காக தமிழ் புலவர் திருவள்ளுவரின் திருவுருவம், திருக்குறள் மற்றும் திருக்குறளின் விளக்கங்களுடன் கூடிய பலகைகள் 20,557 அரசுப் பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ளன.

## 1.3 போக்குவரத்துத் துறையின் நிருவாக அமைப்பு

போக்குவரத்துத் துறை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது.



போக்குவரத்துத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் அலுவல்வழி தலைவராகவும், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநராகவும் செயல்படுகிறார். மேலும், இத்துறை தென்னக இரயில்வே மற்றும் விமான நிலைய விரிவாக்க திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான முகமை துறையாக செயல்படுகிறது.

# அத்தியாயம்-2

# அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்

## 2.1 அரசு போக்குவரத்து கழகங்களின் பங்களிப்பு

தமிழ்நாட்டில் பொதுப் போக்குவரத்து சேவைகள் அரசுக்கு சொந்தமான எட்டு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தனியார் பேருந்து சேவைகளின் மூலமாக வழங்கப்படுகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்கள் போக்குவரத்துத் துறையின் நிருவாக கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது.

அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகளை உள்ளடக்கிய மண்டல மற்றும் மாவட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | அரசுப்போக்குவரத்துக் கழகங்கள் | மண்டலம் | உள்ளடக்கிய மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட். | சென்னை | சென்னை பெருநகரம் |
| 2. | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை. | சென்னை | தமிழ்நாடு முழுவதும், கேரளா, கர்நாடகா, ஆந்திர பிரதேசம் மற்றும் புதுச்சேரி |

| வ. எண் | அரசுப்போக்குவரத்துக் கழகங்கள் | மண்டலம் | உள்ளடக்கிய மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 3. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட். | விழுப்புரம் | விழுப்புரம், கள்ளக்குறிச்சி |
| | | வேலூர் | வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் |
| | | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், செங்கல்பட்டு |
| | | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| | | திருவள்ளூர் | திருவள்ளூர் |
| | | கடலூர் | கடலூர் |
| 4. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட். | சேலம் | சேலம் மற்றும் நாமக்கல் |
| | | தருமபுரி | தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி |
| 5. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட். | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| | | உதக மண்டலம் | நீலகிரி |
| | | ஈரோடு | ஈரோடு |
| | | திருப்பூர் | திருப்பூர் |
| 6. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட். | கும்பகோணம் | தஞ்சாவூர் |
| | | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை |
| | | திருச்சி | திருச்சி, பெரம்பலூர் மற்றும் அரியலூர் |
| | | கரூர் | கரூர் |
| | | காரைக்குடி | சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் |
| | | புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| 7. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட். | மதுரை | மதுரை |
| | | திண்டுக்கல் | திண்டுக்கல் மற்றும் தேனி |
| | | விருதுநகர் | விருதுநகர் |
| 8. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட். | திருநெல்வேலி | திருநெல்வேலி மற்றும் தென்காசி |
| | | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| | | நாகர்கோயில் | கன்னியாகுமரி |

## 2.2 அரசு போக்குவரத்துக் கழகங்களின் உள்கட்டமைப்பு

அரசு போக்குவரத்துக் கழகங்களின் உள்கட்டமைப்பு விவரம் 31.07.2021 அன்றுள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| வ. எண் | விவரம் | மா.போ.கழகம் | அ.வி.போ. கழகம் | அ.போ.க (விழுப்புரம்) | அ.போ.க (சேலம்) | அ.போ.க (கோயம்புத்தூர்) | அ.போ.க (கும்பகோணம்) | அ.போ.க (மதுரை) | அ.போ.க (திருநெல்வேலி) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | மண்டலம் | 1 | 1 | 6 | 2 | 4 | 6 | 3 | 3 | **26** |
| 2. | பணிமனைகள் | 31 | 22 | 60 | 32 | 44 | 60 | 40 | 30 | **319** |
| 3. | தொழிற் கூடம் | 2 | 2 | 3 | 2 | 2 | 4 | 3 | 2 | **20** |
| 4. | வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி | 1 | 1 | 6 | 4 | 2 | 7 | 3 | 2 | **26** |
| 5. | பணியாளர்களின் எண்ணிக்கை | 21,199 | 4,925 | 20,854 | 12,239 | 16,926 | 20,802 | 14,320 | 10,615 | **1,21,880** |

## 2.3 பேருந்து இயக்கங்கள்

அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள நகர பேருந்து சேவைகள் வேறுபட்ட கட்டணத்துடன் சாதாரண, விரைவு, குறிப்பிட்ட நிறுத்தப் பேருந்து, சொகுசு மற்றும் குளிர்சாதனப் பேருந்து என வகைப்படுத்தப்பட்டு இயக்கப்படுகின்றன. புறநகரப் பேருந்து சேவையானது சாதாரண, சாதாரண சொகுசு / விரைவு, நவீன சொகுசு, அதிநவீன சொகுசு, குளிர்சாதன சொகுசு பேருந்து (இருக்கை), அதிநவீன குளிர்சாதனமில்லா சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன், அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன் குளிர்சாதனமில்லா இருக்கை மற்றும் படுக்கை வசதியுடன், குளிர்சாதன பேருந்து இருக்கை மற்றும் படுக்கை வசதியுடன் மற்றும் முதல்தர (Classic) வகைப் பேருந்து கழிப்பறை வசதியுடன் என வகைப்படுத்தப்பட்டு இயக்கப்படுகின்றன. மலைப் பகுதிகளில் இயக்கப்படும் பேருந்துகள் சாதாரண மற்றும் சொகுசு / விரைவு பேருந்துகள் என வகைப்படுத்தப்பட்டு இயக்கப்படுகின்றன.

மாநிலத்தில் உள்ள மொத்த அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளின் எண்ணிக்கை 20,557 ஆகும், அதில் 10,535


வழித்தடங்களில் 19,290 வரையறுக்கப்பட்ட சேவைகளில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதன் விவரம் 31.07.2021 அன்றுள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| அரசு போக்குவரத்துக் கழகங்கள் | நகர்புறம் | | புறநகர்/ விரைவு | மலைப் பகுதி | வரையறுக்கப்பட்ட சேவைகள் | மாற்று பேருந்துகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | சாதாரண / மகளிர் இலவச பயணம் | வரையறுக்கப்பட்ட நிறுத்தங்கள் / விரைவு / சொகுசு | | | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (6)+(7) |
| மா.போ.க . சென்னை, லிட்., | 1,559 | 1,674 | 0 | 0 | 3,233 | 235 | 3,468 |
| அ.வி.போ.க. தமிழ்நாடு, லிட்., | 0 | 0 | 1,082 | 0 | 1,082 | 41 | 1,123 |
| அ.போ.க. (விழுப்புரம்) லிட்., | 1,065 | 9 | 2,063 | 29 | 3,166 | 199 | 3,365 |
| அ.போ.க. (சேலம்) லிட்., | 813 | 24 | 1,038 | 25 | 1,900 | 213 | 2,113 |
| அ.போ.க (கோவை) லிட்., | 1,141 | 182 | 1,055 | 369 | 2,747 | 214 | 2,961 |
| அ.போ.க. (கும்பகோணம்) லிட்., | 1,257 | 28 | 2,050 | 0 | 3,335 | 91 | 3,426 |
| அ.போ.க. (மதுரை) லிட்., | 890 | 380 | 832 | 64 | 2,166 | 162 | 2,328 |
| அ.போ.க, (திருநெல்வேலி) லிட்., | 587 | 234 | 840 | 0 | 1,661 | 112 | 1,773 |
| **மொத்தம்** | **7,312** | **2,531** | **8,960** | **487** | **19,290** | **1,267** | **20,557** |

## 2.4 அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறன்

அரசு போக்குவரத்துக் கழகங்கள் குறைந்தபட்சம் 1000 மக்கள்தொகை கொண்ட ஒவ்வொரு கிராமங்களுக்கு பேருந்து வசதி வழங்குகின்றன. இதன் மூலம் நகர்ப்புறங்களில் உள்ள அனைத்து வாழ்விடங்கள், மாவட்டங்கள் மற்றும் அண்டை மாநிலங்கள் இணைக்கப்படுகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்களின் மூலம் 2019-2020-ஆம் ஆண்டில், தினமும் சுமார் 1.3142 கோடி பயணிகள் பயணம் மேற்கொண்டனர் மற்றும் அனைத்து வகையான சலுகை கட்டணத்தில் பயணம் மேற்கொள்பவர்களையும் சேர்த்து சுமார் 1.7 கோடி பயணிகள் பயணம் மேற்கொண்டனர். கொரோனா பெருந்தொற்று காரணமாக 2020-2021-ஆம் ஆண்டில் 0.7 கோடியாக தற்காலிகமாக குறைந்து மீண்டும் 2021-2022-ஆம் ஆண்டில் முதல் காலாண்டில் குறைந்து, பின் பொதுப் போக்குவரத்தினை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 0.76 கோடியாக (ஜீலை 2021 வரை) உயர்ந்துள்ளது.

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணிப்போரின் எண்ணிக்கை 2011 முதல் 2021 வரை குறைந்து வருவதை கீழ்க்கண்ட வரைப்படத்தில் காணலாம்:




இந்தியாவிலேயே தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் குறைந்த கட்டணத்தில், அதிகப்படியான வழித்தடப் பயன்பாட்டில், பேருந்துகளை இயக்கி வருகின்றன.

29.01.2018 முதல் நடைமுறையில் உள்ள கட்டண அமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| சேவை வகைகள் | இயக்க வகைகள் | கட்டணம் (தீர்வை தவிர்த்து) |
|---|---|---|
| நகர பேருந்துகள் (குறைந்தபட்ச கட்டணம்) | சாதாரணம் | ரூ.4 |
| | குறிப்பிட்ட பேருந்து நிறுத்தம் | ரூ .5 |
| | விரைவு | ரூ .6 |
| | சொகுசு | ரூ .10 |
| | இரவு பேருந்து | ரூ .10 |
| புறநகர் பேருந்துகள் | சாதாரணம் | ஒரு கிலோ மீட்டருக்கு 58 பைசா |
| | சாதாரண சொகுசு | ஒரு கிலோ மீட்டருக்கு 75 பைசா |
| | விரைவு / நவீன சொகுசு பேருந்து | ஒரு கிலோ மீட்டருக்கு 85 பைசா |
| | அதிநவீன சொகுசு | ஒரு கிலோ மீட்டருக்கு 100 பைசா |
| | அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து (இருக்கை) | ஒரு கிலோ மீட்டருக்கு 130 பைசா |
| | அதிநவீன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன் | ஒரு கிலோ மீட்டருக்கு 155 பைசா |
| | அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன் | ஒரு கிலோ மீட்டருக்கு 200 பைசா |

அண்டை மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையேயான பயணக் கட்டண ஒப்பீடு பின்வருமாறு:-

| மாநிலம் | திருத்தியமைக்கப்பட்ட கட்டண நாள் | புறநகர் பேருந்துகள் (ஒரு கிலோ மீட்டருக்கு பைசாவில்) | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சாதாரணம் | சாதாரண சொகுசு | விரைவு / நவீன சொகுசு பேருந்து | அதிநவீன சொகுசு | அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து (இருக்கை) | | அதிநவீன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன் (குளிர்சாதனமில்லாதது) | | அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன் | |
| | | | | | | வேலை நாட்கள் | இதர நாட்கள் | வேலை நாட்கள் | இதர நாட்கள் | வேலை நாட்கள் | இதர நாட்கள் |
| தமிழ்நாடு | 29.01.2018 | 58 | 75 | 85 | 100 | 130 | 110 | 155 | 135 | 200 | 180 |
| ஆந்திர பிரதேசம் | 11.12. 2019 | 73 | 118 | - | 136 | 156 | 156 | - | - | 220 | 220 |
| கர்நாடகா | 26.02.2020 | 66 | 123 | - | 145 | 214 | - | 163 | - | 240 | - |

அண்டை மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையேயான பயணக் கட்டண விகிதத்தை ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் இயக்கப்படும் நகரப் பேருந்துகளில் 10 கிலோ

மீட்டருக்கான கட்டண விகிதம் குறைவாக உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

(ரூபாயில்)

| மாநிலம் | சாதாரண பேருந்து கட்டணம் | விரைவு பேருந்து கட்டணம் |
|---|---|---|
| தமிழ்நாடு | 8.00 | 12.00 |
| ஆந்திர பிரதேசம் | 10.00 | 15.00 |
| கர்நாடகா | 15.00 | 16.00 |

மேலும், அண்டை மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையேயான பயணக் கட்டண விகிதத்தை ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் இயக்கப்படும் புறநகரப் பேருந்துகளில் 100 கிலோ மீட்டருக்கான கட்டண விகிதம் குறைவாக உள்ளது அதன் விவரம் பின்வருமாறு:-

(ரூபாயில்)

| மாநிலம் | சாதாரண பேருந்து கட்டணம் | விரைவு பேருந்து கட்டணம் | அதி நவீன சொகுசு | குளிர்சாதன பேருந்து கட்டணம் | |
|---|---|---|---|---|---|
| | | | | இருக்கை | படுக்கை |
| தமிழ்நாடு | 58.00 | 75.00 | 100.00 | 130.00 | 200.00 |
| ஆந்திர பிரதேசம் | 73.00 | 118.00 | 136.00 | 156.00 | 220.00 |
| கர்நாடகா | 66.00 | 123.00 | 145.00 | 216.00 | 240.00 |

## 2.5 இயக்கச் செயல்பாட்டு திறன் குறியீடுகள்

அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் இயக்கச் செயல்பாட்டு திறன் குறியீடுகளின் விவரங்கள் பின்வருமாறு:-

| பொருள் | 2019-2020 (கொரோனாவிற்கு முன்) | 2020-2021 (கொரோனா காலங்களில்) | 2021-2022 (கொரோனா காலங்களில்) (ஜீலை 2021 வரை) |
|---|---|---|---|
| பேருந்துகளின் எண்ணிக்கை | 21513 | 20670 | 20557 |
| அட்டவணைப் படுத்தப்பட்ட சேவைகள் | 19290 | 19290 | 19290 |
| ஒரு நாளைக்கு இயக்கப்படும் மொத்த தூரம் (இலட்சம் கி.மீ) | 83.68 | 60.25 | 61.02 |
| எரிபொருள் செயல் திறன் (கி.மீ/ லிட்டருக்கு) சராசரியாக | 5.33 | 5.39 | 5.35 |
| கழிவு செய்யப்பட்ட உருளிப்பட்டை ஓடிய தூரம் (இலட்சம் கிலோ மீட்டர்) | 2.54 | 2.77 | 2.79 |
| ஆள் / பேருந்து ஒன்றுக்கு | 6.45 | 6.35 | 6.31 |

**2.6 அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதி செயல்திறன்**


டீசல் விலை அடிக்கடி உயர்ந்து வருவதாலும், உதிரி பாகங்களின் விலை உயர்வாலும், ஊதிய ஒப்பந்தத்தாலும் மற்றும் தொழிலாளர்களுக்கான அகவிலைப்படி உயர்வு வழங்குவதாலும், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் செலவினங்கள் ஏற்படுகின்றன. கொரோனா பெருந்தொற்றின் காரணமாக 2019-2020 மற்றும் 2020-2021 ஆகிய ஆண்டுகளில் முழு ஊரடங்கு அமல்படுத்தியதன் மூலம் அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெரும் இழப்பை சந்தித்துள்ளன. பேருந்துகள் 2019-2020ஆம் ஆண்டில் 8 நாட்களும், 2020-2021-ஆம் ஆண்டில் 141 நாட்களும், 2021-2022-ஆம் ஆண்டில் 42 முதல் 56 நாட்களுக்கு இயக்கப்படாமல் இருந்தன. 2019-2020, 2020-2021 மற்றும் 2021-2022 (ஜூலை வரை) வரையிலான ஆண்டுகளில் அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதி செயல்திறனின் விவரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| வ. எ ண் | விவரங்கள் | 2019-2020 (கொரோனாவிற்கு முன்) | 2020-2021 (கொரோனா காலம்) தணிக்கைக்கு முன் | 2021-2022 (கொரோனா காலம்) தணிக்கைக்கு முன் |
|---|---|---|---|---|
| | **வருவாய்** | | | |
| 1 | இயக்க வருவாய் | 8827.39 | 3517.31 | 1004.54 |
| | ஒப்பந்த பேருந்து | 6.08 | 59.51 | 7.78 |
| | கழிவு செய்யப்பட்ட பேருந்துகளை விற்ற தொகை | 24.04 | 18.69 | 1.69 |
| | இயக்கம் அல்லாத ஏனைய வருவாய் | 1694.91 | 1459.18 | 696.59 |
| | இதர கழிவுகள் விற்பனை | 20.10 | 19.79 | 0.66 |
| | **மொத்த வருவாய்** | **10572.52** | **5074.48** | **1711.26** |
| | **செலவு** | | | |
| 2 | **மாறுபடும் செலவு** | | | |
| | உயர்வேக டீசல் எண்ணெய் | 3860.32 | 1966.85 | 756.70 |
| | இதர செலவுகள்(மசக்கெண்ணெய், டயர், உதிரி பாகங்கள் மற்றும் இதர) | 312.15 | 123.99 | 44.21 |
| | **மொத்தம்** | **4172.47** | **2090.84** | **800.91** |
| 3 | **நிலையான செலவு** | | | |
| | நிர்வாகச் செலவுகள் (வருங்கால வைப்புநிதி, பங்களிப்பு ஓய்வூதிய திட்டம், பணிக்கொடை மற்றும் இதர செலவுகள்) | 8849.63 | 8235.94 | 2715.23 |
| | மோட்டார் வாகன வரிகள் | 196.45 | 104.60 | 53.30 |
| | தேய்மானம் | 540.65 | 634.39 | 138.61 |
| | வட்டி | 1177.65 | 1871.38 | 601.30 |
| | இதர செலவுகள் (வருங்கால வைப்பு நிதி இழப்பு, சுங்கவரி, விபத்து இழப்பீடு, பங்களிப்பு ஓய்வூதிய வட்டி) | 866.23 | 121.38 | 133.57 |
| | **மொத்தம்** | **11630.61** | **10967.69** | **3642.01** |
| | **மொத்த செலவுகள்** | **15803.08** | **13058.53** | **4442.92** |
| | **இழப்பு** | **-5230.56** | **-7984.05** | **-2731.66** |

## 2.7 இயக்கச் செலவினம்

2011 முதல் 2021 வரையிலான ஆண்டிற்கான பல்வேறு செலவினங்களின் விவரங்கள் சதவீதத்தில் பின்வருமாறு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.




நிருவாகச் செலவினங்களான சம்பளம், தொழிலாளர் வைப்பு நிதி, கருணைத்தொகை போன்ற செலவினங்கள் தற்பொழுது அதிகரித்துள்ளது, அதேபோல மற்ற செலவுகளின் கீழ் வரும் வட்டிக்கான செலவினங்களும் அதிகரித்துள்ளது. டீசல் விலை மற்றும் பராமரிப்பு செலவுகள் போன்றவை சந்தை அடிப்படையிலான விலைகள் மற்றும் பயன்பாட்டின் அளவு

ஆகியவற்றுடன் தொடர்புடையது, 2020-2021-ஆம் ஆண்டின் கொரோனா ஊரடங்கு காலத்தில் பேருந்துகள் முழுமையாக நிறுத்தப்பட்டதால், மேற்கண்ட இரண்டு அளவீடுகளும் குறைந்துவிட்டன.

**2.8 அரசின் நிதி உதவி**

அரசு போக்குவரத்துக் கழகங்கள் பேருந்துகளை கொள்முதல் செய்தல், மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருதல் மற்றும் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு சட்டரீதியான ஓய்வூதிய நிலுவைத் தொகைகளை வழங்குதல் போன்றவற்றிற்காக பங்கு மூலதன உதவி, கடன்கள், வழிவகை முன்பணம் மற்றும் அரசின் நிதி உதவியின் மூலம் தொடர்ந்து உதவிகளை வழங்கி வருகிறது. மாணவர்கள், மூத்த குடிமக்கள் மற்றும் இதர இலவச பேருந்து கட்டணப் பயண அட்டைதாரர் போன்ற பல்வேறு பிரிவினரால் ஏற்படும் நிதி இழப்பீட்டினை, போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு ஈடு செய்கிறது. அதிவேக டீசலின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதன் மூலம் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் இழப்பினை திரும்பப் பெறவும் அரசு அனுமதித்துள்ளது. 2021-2022-ஆம் நிதியாண்டின்

திருத்தப்பட்ட வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், கீழ்க்கண்ட இனங்களுக்கு நிதி உதவி வழங்கியுள்ளது:-

(ரூபாய் கோடியில்)

| வ. எண். | பொருள் | திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு 2021-2022 |
|---|---|---|
| 1. | பங்கு மூலதனம் | 596.5609 |
| 2. | மாணவர் பயணச் சலுகை | 1300.000 |
| 3. | மகளிர் இலவச பயணச் சலுகை | 670.0000 |
| 4. | கடன்கள் (KfW) | 451.5000 |
| 5. | மூத்த குடிமக்கள் பயணச் சலுகை | 52.0000 |
| 6. | உயர்வேக டீசல் | 750.0000 |

அரசு இந்நிதியாண்டில் (31.07.2021 அன்றுள்ளவாறு), (i) ரூபாய் 649.07 கோடியினை மாணவர் பயணச் சலுகைக்காக அனுமதித்துள்ளது. (ii) மூத்த குடிமக்களுக்கான இலவச பயணச் சலுகை அளித்ததற்கு ரூ.3.57 கோடியினை மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு திருப்பி செலுத்தப்பட்டது. (iii) அதிவேக டீசல் விலை உயர்வினால் ஏற்படும் இழப்பினை ஈடு செய்வதற்காக அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் ரூ.196.4983 கோடியை வழங்கியுள்ளது. (30 ஜீன் 2021 வரை)

மேலும், (iv) ரூ.424.47 கோடி பங்கு மூலதனமாக தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

**2.9 அரசு உத்தரவாதம்**

கொரோனா பெருந்தொற்றை கட்டுப்படுத்துவதற்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. இதன் காரணமாக, அரசு போக்குவரத்துக் கழகங்கள் அத்தியாவசிய சேவைகளை தவிர மற்ற சேவைகள் அனைத்தும் நிறுத்துமாறு அறிவுறுத்தப்பட்டன. அதன் விளைவாக, அரசு போக்குவரத்துக் கழகங்கள் தற்போது கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றன. எனவே, அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு உதவும் பொருட்டு அவற்றின் செயல்பாட்டு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்து கடன் பெறுவதற்காக அரசு உத்தரவாதத்தை வழங்கி வருகின்றது. அவ்வகையில் தற்போது அரசாணை (நிலை) எண்.80, போக்குவரத்து (ட்டி1) துறை, நாள்: 03.08.2021-ன்படி, ஜீன் 2021 முதல் ஆகஸ்ட் 2021 வரையிலான காலங்களுக்கு அரசு போக்குவரத்துக் கழகங்களின் மூலதன செயல்பாட்டு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ரூ.1,500.81 கோடியினை

கடனாக பெறுவதற்கு அரசின் உத்தரவாதத்தை வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

## 2.10 பொது சேவைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

### அ) புதிய பேருந்து வழித்தடங்கள் அறிமுகம் மற்றும் நிறுத்தப்பட்ட பேருந்து வழித்தடங்களை மீண்டும் இயக்குதல்.

பொது மக்களின் கோரிக்கையின் அடிப்படையில், வேலைக்கு செல்வதற்கும், மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்கும், சந்தைக்கு செல்வதற்கும், கிராம மக்கள் அண்டை நகரங்களுக்கு செல்வதற்கும் அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஒரு சமூக கடமையாக பேருந்துகளை இயக்கி வருகின்றன. பொது மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்கும் பொருட்டு தற்போது இயக்கப்பட்டு வரும் வழித்தடங்களை மாற்றம் செய்து புதிய வழித்தடங்களை உருவாக்கிட திட்டமிடப்பட்டுள்ளது. 07.05.2021 முதல் 22.08.2021 வரை 54 புதிய வழித்தடங்களில் 70 பேருந்து சேவைகளை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அதே போன்று, முன்பு நிறுத்தப்பட்ட சில வழித்தடங்களுள்

123 வழித்தடங்களில் 140 பேருந்து சேவைகள் அரசால் மீண்டும் இயக்கப்பட்டு வருகின்றன.

| அரசு போக்குவரத்துக் கழகங்கள் | அறிமுகப்படுத்தப் -பட்டுள்ள புதியவழித்தடங்கள் (எண்ணிக்கையில்) | | மீண்டும் தொடங்கப்பட்ட வழித்தடங்கள் (எண்ணிக்கையில்) | |
|---|---|---|---|---|
| | வழித் தடங்கள் | பேருந்து சேவைகள் | வழித் தடங்கள் | பேருந்து சேவைகள் |
| மா.போ.க சென்னை, லிட்., | 17 | 25 | 21 | 36 |
| அ.வி.போ.க தமிழ்நாடு, லிட்., | 11 | 20 | 8 | 10 |
| அ.போ.க (விழுப்புரம்) லிட்., | 11 | 10 | 10 | 10 |
| அ.போ.க (சேலம்)லிட்., | 0 | 0 | 4 | 6 |
| அ.போ.க (கோயம்புத்தூர்) லிட்., | 2 | 2 | 11 | 11 |
| அ.போ.க (கும்பகோணம்) லிட்., | 11 | 10 | 39 | 34 |
| அ.போ.க (மதுரை) லிட்., | 0 | 0 | 22 | 25 |
| அ.போ.க (திருநெல்வேலி) லிட்., | 2 | 3 | 8 | 8 |
| **மொத்தம்** | **54** | **70** | **123** | **140** |

**ஆ) சென்னையில் சிறிய பேருந்துகள் இயக்கம்**

மாநகரப் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட் 210 சிறிய பேருந்துகளைக் கொண்டுள்ளது. இவற்றுள், 66 சிறிய பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன, பயணிகளின் பயன்பாடு குறைந்து அதிக இழப்பு ஏற்பட்டதால் மீதமுள்ள 144 சிறிய பேருந்துகள் இயக்கப்படாமல் நிறுத்தப்பட்டுள்ளன. எனவே, நிறுத்தப்பட்டுள்ள இச்சிறிய பேருந்துகளை சிறந்த முறையில் பயன்படுத்திட, பிற பகுதிகளிலிருந்து மெட்ரோ இரயில் நிலையங்களுக்கு இயக்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சென்னை மெட்ரோ பயணிகளின் எண்ணிக்கை உயர்வதுடன், மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு வருவாய் அதிகரிக்கும். இதனை செயல்படுத்திட மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

**இ) இணையவழி முன்பதிவு**

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தொலை தூரப் பயணம் செய்யும் பயணிகளுக்கு உதவும் வகையில் அரசு

போக்குவரத்துக் கழகங்களின் இணையதளமான https://www.tnstc.in மூலம் பயணச்சீட்டு முன்பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2021-2022 ஆண்டில் (ஜூலை 2021 வரை) சராசரியாக இணையவழி முன்பதிவு 76.14% ஆக அதிகரித்துள்ளது.

## 2.11 கட்டணச் சலுகைகள்

**அ) பயணக் கட்டணச் சலுகை வழங்கப்படும் பயனாளிகளின் வகைகள் பின்வருமாறு:-**

| | |
|---|---|
| அ. | நாடாளுமன்ற / சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் மேலவை முன்னாள் உறுப்பினர்கள். |
| ஆ. | பெண் பயணிகள், திருநங்கைகள், 40% மற்றும் அதற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களுடன் வரும் துணையாளர். |
| இ. | அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கை நிருபர்கள் / ஊடக நபர்கள். |
| ஈ. | மத்திய / மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகள், வாரிசுதாரர்கள், தமிழறிஞர்கள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்கள். |
| உ. | புற்று நோயாளிகள். |
| ஊ. | நாடகக் கலைஞர்கள் அவர்கள் கொண்டு வரும் இசைக் கருவிகள். |
| எ. | எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோயாளிகள். |
| ஏ. | மூத்த குடிமக்களுக்கான பேருந்துப் பயண அட்டை (60 வயதிற்கு மேற்பட்டோர்) - குளிர்சாதன பேருந்துகளை தவிர்த்து சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மட்டும். |

**ஆ) மாணவர்களுக்கான சிறப்புச் சலுகைகள்**

பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், பின்வரும் கட்டணமில்லாப் பயணச் சலுகை அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தவிர) வழங்கப்பட்டு வருகிறது. இச்சலுகைக்கானத் தொகையை போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசால் ஈடுசெய்யப்படுகிறது.

| | |
|---|---|
| (அ) | அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் உள்ளிட்ட அனைத்துப் பள்ளிகள் (1-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை). |
| (ஆ) | தேசிய குழந்தை மற்றும் தொழிலாளர் திட்ட நலப்பள்ளி. |
| (இ) | அரசு பல்தொழில்நுட்பப் பயிலகங்கள். |
| (ஈ) | அரசு தொழிற்பயிற்சிக் கூடங்கள். |
| (உ) | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள். |
| (ஊ) | சமுதாயக் கல்லூரிகள். |
| (எ) | அரசு உதவிபெறும் தனியார் தொழிற்பயிற்சிக் கூடங்கள். |
| (ஏ) | இசைக் கல்லூரிகள். |
| (ஐ) | சென்னை மாநகராட்சித் தொழிற்பயிற்சிக் கூடங்கள். |

**இ) 50% பயணக் கட்டணச் சலுகை**

| | |
|---|---|
| (அ) தனியார் கல்லூரிகள்<br>(ஆ) தனியார் தொழில்நுட்பப் பயிலகங்கள்<br>(இ) தனியார் பொறியியல் கல்லூரிகள் | அரசு அங்கீகாரம் பெற்றவை |

**ஈ) விருப்பம் போல் பயணம் செய்ய மாதாந்திரப் பயணச் சீட்டுகள்**

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி, வேலூர், திருப்பூர், ஈரோடு, மற்றும் தூத்துக்குடி ஆகிய மாநகராட்சிகளிலுள்ள அரசு நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் மாதாந்திரப் பயணச் சீட்டானது, ஒரு சீட்டுக்கு ரூ.1,000/- கட்டண விகிதத்தில் விருப்பம் போல் பயணம் செய்ய பயணச் சீட்டுகள் சில நிபந்தனைகளுடன் வழங்கப்படுகின்றன.

**உ) மூன்றில் ஒரு பங்கு கட்டணச் சலுகை**

மாநகர் மற்றும் நகரப் பகுதிகளில் தினந்தோறும் பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக நடைமுறையில் இருந்து வரும் மூன்றில் ஒரு பங்கு பயணக் கட்டணச் சலுகையானது புறநகர் பேருந்துகளுக்கும் அளிக்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டம் பயணிகளிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது

**2.12 பணியாளர் நல நடவடிக்கைகள்**

**அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி.**

அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தினை செயல்படுத்த, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சியானது ஒருங்கிணைப்பு முகமையாக உள்ளது. அரசு போக்குவரத்துக் கழக பணியாளருக்கு ஓய்வூதிய திட்டம் அரசால் 01.09.1998 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டது. 31.03.2003 அன்றும் அதற்கு முன்பும் பணியில் சேர்ந்த பணியாளர்கள் இத்திட்டத்தின்கீழ் வருவர். தற்போது, இத்திட்டத்தின்கீழ் 1,28,362 பணியாளர்கள் உள்ளனர். அவர்களுள் 83,222 பணியாளர்கள் (31.07.2021 அன்றுள்ளவாறு) ஓய்வு பெற்றுள்ளனர் மற்றும் அவர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.107.25 கோடி வழங்கப்பட்டு வருகின்றது.

**ஆ) சட்டரீதியான ஓய்வூதியப் பணப்பலன்களை அளிப்பது**

ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேமநல நிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு ஊதியம், ஓய்வூதிய ஒப்பளிப்பு மற்றும் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டம் ஆகிய சட்டரீதியான ஓய்வூதியப் பணப்பலன்களை வழங்கும் பொருட்டு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு பங்கு மூலதன உதவி, குறுகிய கால கடன்கள் மற்றும் வழிவகை முன்பணம் ஆகியவற்றின் மூலமாக அரசு தொடர்ந்து நிதி உதவி வழங்கி வருகின்றது.

ஜனவரி 2020 முதல் ஏப்ரல் 2020 வரை ஓய்வு பெற்ற அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு சட்டரீதியான ஓய்வூதியப் பணப் பலன்களை வழங்கிட அரசு ரூ.497.32 கோடி அனுமதித்துள்ளது.

## 2.13 பேருந்து போக்குவரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

### அ) (KfW) ஜெர்மனி நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள திட்டம்

பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை வாங்குவதற்கு, (KfW) ஜெர்மனி நிதி நிறுவனத்துடன் அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. அதன்படி, 12,000 BS-VI ரகப் பேருந்துகள் மற்றும் 2,000 மின்சார பேருந்துகளை 2021 ஆம் ஆண்டு முதல் 5 வருட காலங்களில் கொள்முதல் செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான தொகையில் 80% ஜெர்மனி நிதி நிறுவனம் (KfW) வட்டி இல்லா கடனாகவும், மீதமுள்ள 20% தமிழக அரசு பங்காகவும் இருக்கும்.

முதல் இரண்டு கட்டங்களில் 2,213 டீசல் பேருந்துகள் மற்றும் 500 மின்சார பேருந்துகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்படும். இது தவிர, தகவல் தொழில்நுட்ப மென்பொருள் மற்றும் வன்பொருள் மேம்பாடு, பயணிகள் தகவல் அமைப்பு, பணமில்லா பரிவர்த்தனை போன்றவை அரசு போக்குவரத்துக் கழகங்களில் பிற முக்கிய முதலீட்டு கூறுகள் ஆகும்.

### ஆ) புதிய முயற்சிகள்

- வணிக மேம்பாட்டிற்காக தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள 16 பேருந்து பணிமனைகள் / முனையங்கள் நவீனமயமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

- அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய மின் உற்பத்தி அலகுகள் நிறுவுதல்.

- அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு கூடுதல் வருவாயை அதிகரிக்க முதற்கட்டமாக அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான இடங்களில் எண்ணெய் விற்பனை நிறுவனங்களின் முகமையின் கீழ் (Dealership) பொது மக்களும் எரிபொருள் வாங்குவதற்கு பெட்ரோல் / டீசல் சில்லறை விற்பனை நிலையங்கள் அமைத்தல்.

### 2.14 விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம்

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்தில் காயமடைந்தவர்களுக்கும், உயிரிழந்தவர்களின்

வாரிசுதாரர்களுக்கும், விரைவாக விபத்து இழப்பீட்டை வழங்கும் பொருட்டு, 2010-2011 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டிற்கும் முறையே அரசின் பங்காக ரூ.20 கோடியும், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பங்காக ரூ.20 கோடியும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.40 கோடியில் விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம் (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம் 2015-16-ஆம் ஆண்டு முதல் ரூ.40 கோடியிலிருந்து ரூ.60 கோடியாக உயர்த்தப்பட்டு, இதில், அரசின் பங்களிப்பாக ரூ.30 கோடியும், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பாக ரூ.30 கோடியும் என உயர்த்தப்பட்டுள்ளது. மேற்படி நிதியம், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

20.01.2018 முதல் பேருந்து பயணிகளிடம் தீர்வை (Cess) வசூல் செய்து அதனைக் கொண்டு விபத்து இழப்பீடு, விபத்து தடுப்பு மற்றும் சுங்கக் கட்டணத்திற்காக பயன்படுத்தப்படுகிறது. இதற்கென தமிழ்நாடு மாநில போக்குவரத்துக் கழக விபத்து இழப்பீடு மற்றும் சுங்கக் கட்டணத்திற்கான நிதியம்

உருவாக்கப்பட்டுள்ளது. பயணிகளிடமிருந்து பெறப்படும் தீர்வைக் கட்டணம் பின்வருமாறு:-

(ரூபாயில்)

| வ. எண். | பயண கட்டண வரம்பு | நகர் | புறநகர் |
|---|---|---|---|
| | | பயணிகளிடமிருந்து பெறப்படும் தீர்வை | பயணிகளிடமிருந்து பெறப்படும் தீர்வை |
| 1. | ரூ.25 வரை | 1 | 1 |
| 2. | ரூ.26 முதல் ரூ.50 வரை | _ | 2 |
| 3. | ரூ.51 முதல் ரூ.75 வரை | _ | 3 |
| 4. | ரூ.76 முதல் ரூ.100 வரை | _ | 4 |
| 5. | ரூ.101 முதல் ரூ.200 வரை | _ | 5 |
| 6. | ரூ.201 முதல் ரூ.300 வரை | _ | 6 |
| 7. | ரூ.301 முதல் ரூ.400 வரை | _ | 7 |
| 8. | ரூ.401 முதல் ரூ.500 வரை | _ | 8 |
| 9. | ரூ.501-க்கு மேல் | _ | 10 |

20.01.2018 முதல் 31.07.2021 வரை ரூ.1,431.86 கோடி தீர்வையாக வசூலிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ரூ.477.52 கோடி சுங்க கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. 10,081 விபத்துகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.531.79 கோடி நேர் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, 10,081 விபத்து இழப்பீடுகளுள், நீதிமன்ற உத்தரவின்படி, 6,342 விபத்து இழப்பீடுகளுக்கு

ரூ.326.68 கோடியும், மக்கள் நீதி மன்றத்தின் மூலம் தீர்வு செய்யப்பட்ட 3,739 விபத்து இழப்பீட்டு வழக்குகளுக்கு ரூ.205.11 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

விபத்து இழப்பீட்டு வழக்குகளை விரைவாக தீர்ப்பதற்கு ஒரு குழுவும் மற்றும் இழப்பீடு வழங்கிட வழிமுறையும் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 2021-2022-ஆம் ஆண்டில் (ஜீலை 2021 வரை) 12 வழக்குகளுக்கு ரூ.0.19 கோடி இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

## 2.15 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை.

இக்கழகம் மேலாண் இயக்குநர் அவர்களின் தலைமையின் கீழ், இயங்கி வருகின்றது. இக்கழகத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ள பல்லவன் சாலையில் அமைந்துள்ளது. இக்கழகத்தின் பேருந்து இயக்கம் கேரளா, கர்நாடகா, ஆந்திரம் மற்றும் புதுச்சேரி ஆகிய அண்டை மாநிலங்களுக்கு விரிவடைந்துள்ளது.

- 31.07.2021 அன்றுள்ளவாறு, 22 பணிமனைகள் மூலம் 1,123 பேருந்துகளை இயக்குகின்றது. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் 251 வழித்தடங்களை இயக்கி

வருகின்றது. அவற்றில் தமிழ்நாட்டின் உட்பகுதிகளுக்கு 139 வழித்தடங்களும் ஆந்திரம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய அண்டை மாநிலங்களுக்கு 112 வழித்தடங்களும் இக்கழகத்தால் இயக்கப்படுகின்றன.

- இக்கழகத்தின் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 31.07.2021 அன்றுள்ளவாறு 4,925 ஆகும். இக்கழகம் அதிநவீன மிதவை பேருந்து, குளிர்சாதன பேருந்து, குளிர்சாதன படுக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதன படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதனமில்லா படுக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதனமில்லா படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்து மற்றும் கழிப்பறை வசதியுடன் கூடிய பேருந்துகள் ஆகிய பேருந்து வகைகளை இயக்கி வருகின்றது.

- இந்திய ரயில்வே துறை மற்றும் விமான துறை ஆகியவைகளை போலவே இணைய தளம் மற்றும் கைபேசி (Online Ticket Reservation System) மூலமாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் மற்றும் இதர போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் தொலைதூரப்

பேருந்துகளில் பயணம் செய்ய முன்பதிவு செய்யும் வசதி பயணிகளுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

- இணையதள முன்பதிவு வசதியானது (Online Ticket Reservation System) தமிழ்நாடு மற்றும் ஆந்திரம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி போன்ற அண்டை மாநிலங்களில் 58 இடங்களில் 64 முன்பதிவு மையங்களின் மூலமாக முன்பதிவு செய்யப்படுகின்றன.

- இப்போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் ஒருவழித் தடத்தில், முன்பதிவு மையங்கள் இல்லாத இடத்தில் முன்பதிவு செய்யும் பயணிகள் வசதிக்காக தற்போது இணையதளம் மூலமாக எதிர் முனையிலிருந்து திரும்ப வருவதற்கான இருக்கைகள் முன்பதிவு செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது.

- அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் கழிப்பறை வசதி கொண்ட "கிளாசிக்" பேருந்துகளை சென்னையிலிருந்து பிற ஊர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

- தலைமை அலுவலகம், பேருந்து நிலையம் போன்ற முக்கிய இடங்களை கண்காணிக்கவும் பயணிகள்

போக்குவரத்தை கண்காணிக்கவும் ஆங்காங்கே கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது.

- முக்கிய இடங்களுக்கு குறிப்பிட்ட அடையாள பெயர்களுடன் (Brand Names) 50 "பிரீமியம் சர்வீஸ்கள்" (Premimum Services) இயக்கப்படுகின்றன. முன்பதிவு செய்த பயணிகளின் நன்மைக்காக, குறிப்பிட்ட இடங்களில் ஏறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இவ்வசதி கோயம்புத்தூர், திருநெல்வேலி, நாகர்கோயில் போன்ற முக்கிய நகரங்களிலுள்ள 13 இடங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- பொது மக்கள் எளிதாக பயணம் செய்யும் வகையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையிலும், தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகை நாட்களின் போது சிறப்புப் பேருந்துகள் சென்னை மாநகரப் பகுதிகளில் 5 தற்காலிக பேருந்து முனையங்களிலிருந்து பிரித்து இயக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பொது மக்கள் போக்குவரத்து இடையூறின்றி பயணிக்க முடிகின்றது.
- முன்பதிவு செய்யப்பட்ட பயணிகளுக்கு பேருந்து நடத்துனரின் பெயர், பேருந்து பதிவு எண் மற்றும்

கைபேசி எண், குறுஞ்செய்தியாகப் பயணம் தொடங்க 30 நிமிடங்களுக்கு முன் அனுப்பப்படுகின்றது. இதன் மூலம் பேருந்து புறப்படும் நேரம் மற்றும் இடம் முதலியவற்றை பயணிகள் தெரிந்துக்கொள்ளலாம்.

- சென்னை, மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள முக்கிய பணிமனைகளில் நவீன பயிற்சி வசதிகளுடன் கூடிய மூன்று பயிற்சி மையங்கள் கட்டப்பட்டுள்ளன. ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கு விபத்தில்லா ஓட்டுநர் பயிற்சி, எரிபொருள் திறன் மேம்பாட்டு பராமரிப்பு நடைமுறைகள், தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் மன அழுத்த மேலாண்மை போன்ற பயிற்சிகளை பல்வேறு தொழில்களைச் சேர்ந்த அனுபவமிக்க மற்றும் அறிவார்ந்த பயிற்சியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் உதவியுடன் அளிக்கப்படுகிறது.

## 2.16 மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை.

மாநகர் போக்குவரத்துக் கழகம் சென்னையை தலைமையிடமாக கொண்டு மேலாண் இயக்குநர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இக்கழகம் சென்னை நகரில் பேருந்துகளை இயக்கும் தனியுரிமை பெற்ற

நிறுவனமாகும். இக்கழகம் சென்னை பெருநகர் மற்றும் அதனை ஒட்டியுள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களிலும் நகரப் பேருந்துகளை இயக்குகின்றது.

- 31.07.2021 அன்றுள்ளவாறு. இப்போக்குவரத்துக் கழகம் 31 பணிமனைகளையும், 3,468 பேருந்துகளை கொண்டு 3,233 சேவைகளை 578 வழித்தடங்களில் இயக்கி வருகின்றது. இக்கழகத்தின் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 21,199 ஆகும். இக்கழகம் சாதாரண பேருந்து, விரைவு பேருந்து, சொகுசு பேருந்து, குளிர்சாதன பேருந்து ஆகியவற்றை இயக்கி வருகின்றது. இக்கழகத்தின் இரண்டு பேருந்து கூண்டு கட்டும் பிரிவு குரோம்பேட்டையில் அமைந்துள்ளது.

- பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் அமைப்பதன் மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.

- நகரங்களில் பெண்கள் மற்றும் சிறார்களுக்கு எதிரான வன்முறையினை கட்டுப்படுத்தவும், பொது இடங்களில் பெண்களின் பாதுகாப்பை அதிகரிக்கவும் நிர்பயா நிதியின் கீழ் பெண்கள் பாதுகாப்பு

திட்டம் சென்னை மாநகரப் பகுதிகளில் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் குழந்தை மற்றும் பெண் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு இணைய நெறிமுறை (Internal Protocol) அடிப்படையிலான மறைகாணிகளை (CCTV Cameras) மாநகர் போக்குவரத்துக் கழக பேருந்துகள், பணிமனைகள் மற்றும் பேருந்து முனையங்கள் ஆகியவற்றில் பொருத்துவதன் மூலம் அவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. இதன் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குகிறது. பேருந்துகளில் இருக்கும் கண்காணிப்பு கேமராக்கள் மூலம் நிகழ்வுகள் பதிவு செய்யப்படும். ஆயினும் தேவைப்படும் போது அதன் நடப்பு நிகழ்வுகள் கண்காணிப்பு நிலையங்களிலிருந்து கண்காணிக்கப்படும். SOS Panic பொத்தானை அழுத்தும்போது அவசரகால பதிலுக்காக காவல் கட்டுப்பாட்டு மையத்துடன் இணைக்கப்படும். 2500 மாநகரப் பேருந்துகளிலும், பணிமனைகள், பேருந்து முனையங்கள் மற்றும் பிற அலகுகளில் (Units) 66 இடங்களிலும் மறைகாணிகள் (CCTV Cameras)

பொருத்தும் பணி ரூ.72.71 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

- இப்போக்குவரத்துக் கழகம், காற்று மாசினை கட்டுப்படுத்திடவும் இயக்க செலவினை குறைத்திடவும் அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு / திரவ இயற்கை எரிவாயு பேருந்துகளை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.

**சென்னை சீர்மிகு நகரம் திட்டத்தின்கீழ் நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மை அமைப்பை (ITMS) செயல்படுத்துதல்**

- மேம்படுத்தபட்ட நவீன தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை (ICT) பயன்படுத்தி பேருந்துகள் இயக்கம், பேருந்து இயக்க அட்டவணை கடைபிடித்தல், பணிமனைகளில் இருந்து வாகனங்களை அனுப்புதல், பணிமனை மேலாண்மை மற்றும் நிகழ்வுகளை கையாளுதல் ஆகியவற்றை மாநகர் போக்குவரத்துக் கழத்தில் சென்னை சீர்மிகு திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது. மேலும், பேருந்துகளின் இயக்க தகவல்கள் நேரலையாக

கீழ்க்கண்ட முறைகளில் பயணிகளுக்கு வழங்கப்படுகிறது.

அ) தானியங்கி வாகன இருப்பிடம். (Automatic Vehicle Location)

ஆ) பயணிகள் தகவல் அமைப்பு. (Passenger Information System)

இ) பணிமனை மேலாண்மை அமைப்பு (Operation Related)

- சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்த, 65 பேருந்துகளுக்கு பேருந்து பக்கவாட்டு பாதுகாப்பு அலகு (Under Run Protection Unit) பொருத்தப்பட்டுள்ளது.

**2.17 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம்.**

இப்போக்குவரத்துக் கழகம் விழுப்புரம் நகரை தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. போக்குவரத்துச் சேவையை கண்காணித்து மேம்படுத்த விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம், நகர், புறநகர் மற்றும்

மலைப்பகுதிகளுக்கு பேருந்து சேவைகளை அளித்து வருகின்றது.

- 31.07.2021 அன்றுள்ளவாறு, இக்கழகத்திற்கு சொந்தமான பணிமனைகளின் எண்ணிக்கை 60 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 3,365 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 3,166 ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 20,854 ஆகும்.
- இக்கழகம், சாதாரண, விரைவு, சொகுசு, இடைநில்லா பேருந்து மற்றும் 3 X 2 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன பேருந்துகளை இயக்கி வருகின்றது.

இக்கழகம் பொது மக்கள் மற்றும் பக்தர்கள் வசதிக்காக இயக்க பகுதிகளுக்குட்பட்ட அனைத்து பேருந்து நிலையங்களிலிருந்தும் பிரதி அமாவாசை (மேல்மலையனூர்), பௌர்ணமி (திருவண்ணாமலை), ஆடிக்கிருத்திகை (திருத்தணி), தைபூசம் (வடலூர்), கூவாகம், சித்திரை பௌர்ணமி, தீபம், பொங்கல் மற்றும் தீபாவளி ஆகிய திருவிழா மற்றும் விசேச நாட்களில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

மலைவாழ் மக்கள் மற்றும் மலைப்பாங்கான தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலனுக்காக கல்வராயன்மலை, சேராப்பட்டு மலை, வெள்ளிமலை, ஜமுனாமரத்தூர் மலை, புதூர்நாடு, ஏலகிரி, வெலத்திகாமணிபென்டா, அரவட்லா, பாலமதி மற்றும் செங்காநத்தம் போன்ற மலை பகுதிகளுக்கு 29 மலை வழித்தட சேவைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

விழுப்புரம், காஞ்சிபுரம், புதுச்சேரி, வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய ஐந்து இடங்களிலிருந்து சென்னைக்கு நேரடி பயணிகளின் வசதிக்காக 95 இடைநில்லா பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

**குளிர்சாதனப் பேருந்துகள்**

துவக்கத்தில் 3 X 2 இருக்கை வசதிகளுடன் கூடிய இரு குளிர்சாதனப் பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதிக பயணிகளை கவரும் பொருட்டு தற்போது 92 குளிர்சாதனப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் மற்றும் பணிமனைகளின் சுற்றுச் சுவற்றில் விளம்பரம் செய்வதன் மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.

**ஓட்டுநர் பயிற்சி நிலையங்கள்**

இக்கழகத்திலுள்ள 6 மண்டலங்களிலும் ஓட்டுநர் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இரு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி தடம் இக்கழகத்தில் அமைந்துள்ளன.

## 2.18 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம்.

இப்போக்குவரத்துக் கழகம் சேலம் நகரை தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகின்றது. சேலம் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருப்பத்தூர் மாவட்டத்தின் சில பகுதிகள் இப்போக்குவரத்துக் கழகத்தின் இயக்கப் பகுதிகளாகும்.

31.07.2021 அன்றுள்ளவாறு, இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 32 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 2,113 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,900 ஆகும். இப்போக்குவரத்துக்கழகத்தில் பணியாளர்களின் எண்ணிக்கை 12,239 ஆகும்.

பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் மற்றும் பணிமனைகளின் சுற்றுச் சுவற்றில் விளம்பரம் செய்வதன் மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.

இக்கழகம் கீழ்க்கண்ட கூடுதல் வசதிகளை பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு செய்து வருகின்றது:-

(அ) வார இறுதி நாட்கள் மற்றும் முக்கிய விசேஷ நாட்களில் ஏற்காடுமலை, கொல்லிமலை, ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி மற்றும் மேட்டூர் அணை போன்ற சுற்றுலாத் தலங்களுக்கு சிறப்பு பேருந்துகளை இயக்கி வருகிறது.

(ஆ) பண்டிகை மற்றும் முக்கிய நாட்களில் மாதேஸ்வரன் மலை சிவன் கோயில் அமைந்துள்ள தாரமங்கலம், திருச்செங்கோடு, பேளூர் மற்றும்

அரகளூர் பகுதிகளுக்கும், முருகன் கோயில் அமைந்துள்ள காளிபட்டி மற்றும் கபிலர்மலை பகுதிகளுக்கும், நாமக்கல் ஆஞ்சநேயர் கோயில் ஆகிய வழிப்பாட்டுத் தலங்களுக்கும் சிறப்பு பேருந்துகளை இயக்கி வருகின்றது.

இக்கழகம், ஏற்காடு மலை, கொல்லிமலை, கல்ராயன்மலை (வெள்ளிமலை) மற்றும் நல்லமதிமலை (பச்சமலை) ஆகிய மலைப் பகுதிகளுக்கு 25 சேவைகளை மலைவாழ் மக்கள் மற்றும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் இயக்கி வருகின்றது.

## 2.19 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர்.

இக்கழகம், கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின் கீழ் இயங்கி வருகின்றது. இக்கழகம், கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்கு பேருந்து சேவையினை அளித்து வருவதுடன், கேரளா, கர்நாடகா போன்ற அண்டை மாநிலங்களுக்கும் பேருந்து சேவையினை அளித்து வருகிறது.

31.07.2021 அன்றுள்ளவாறு இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 44 ஆகும். இக்கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை 2,961 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 2,747 ஆகும். இப்போக்குவரத்துக் கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 16,926 ஆகும்.

பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் மற்றும் பணிமனைகளின் சுற்றுச் சுவற்றில் விளம்பரம் செய்வதன் மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.

பணியாளர்களுக்கு பயிற்சி தரும் பொருட்டு இப்போக்குவரத்துக் கழகத்தால் பொள்ளாச்சி மற்றும் ஈரோடு மண்டலத்திலுள்ள பவானிசாகரில் பயிற்சி நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

புதியதாக பணியமர்த்தப்படும் ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கவும், பணியிலுள்ள ஓட்டுநர்களின் திறமையினை மேம்படுத்திடவும் ஒரு ஓட்டுநர் ஒத்த கருவி (Simulator) பொள்ளாச்சியில் உள்ள பயிற்சி நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிறுவனத்தில் இதுநாள் வரை 3,975 ஓட்டுநர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். சாலைப் பாதுகாப்பு

நிதியின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட மற்றுமொரு ஓட்டுநர் ஒத்த கருவி (Simulator), ஓட்டுநர்களின் திறமையை மேம்படுத்திட, பவானிசாகரிலுள்ள பயிற்சி நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ளது.

- இக்கழகம் வால்பாறை, மருதமலை, உதகமண்டலம் மற்றும் கூடலூரில் பேருந்து நிலையங்களை அமைத்து பராமரித்து வருகின்றது.

- பயணிகளின் வசதிக்காக இக்கழகம் பர்லியார் மற்றும் ஆசனூரில் சாலையோர சிற்றுண்டி விடுதிகளை பராமரித்து வருகின்றது.

- பணியாளர்களின் நலனுக்காக கோயம்புத்தூர், பொள்ளாச்சி, பவானிசாகர் மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் பயிற்சி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

## 2.20 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம்

இக்கழகம், கும்பகோணத்தை தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின் கீழ் இயங்கி வருகிறது. கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, காரைக்குடி, புதுக்கோட்டை,

நாகப்பட்டினம் மற்றும் கரூர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

31.07.2021 அன்றுள்ளவாறு, இப்போக்குவரத்துக் கழகத்தின் மொத்த பணிமனைகளின் எண்ணிக்கை 60 ஆகும். இக்கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை 3,426. மேலும், 3,335 வரையறுக்கப்பட்ட சேவைகளை இயக்கி வருகின்றது. இக்கழகத்தில் உள்ள மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 20,802 ஆகும்.

இக்கழகம், சாதாரணம், விரைவு, அதிசொகுசு மற்றும் 3 X 2 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன பேருந்துகளை இயக்கி வருகின்றது. இப்போக்குவரத்துக் கழகத்தின் கூண்டு கட்டும் பிரிவுகள் உதிரி பாகங்கள் புதுப்பிக்கும் பிரிவுகளுடன் பொறையார், கரூர் (மண்மங்கலம்), காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும் மற்றும் உருளிப்பட்டை புதுப்பிக்கும் பிரிவுகள் கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, தேவகோட்டை மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும் இயக்கி வருகின்றது.

இப்போக்குவரத்துக் கழகத்தின் இயக்க எல்லை 11 வருவாய் மாவட்டங்களும் மற்றும் யூனியன் பிரதேசமான புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஆகியவையாகும். இக்கழகத்தின் இயக்க எல்லைக்குட்பட்ட உலக புகழ் பெற்ற வேளாங்கன்னி ஆலயம், உலக புராதன சின்னமான தஞ்சை பெருவுடையார் கோயில், திருவரங்கம் கோயில், நவக்கிரக கோயில்கள் மற்றும் சமயபுரம் கோயில் ஆகிய வழிபாட்டுத்தலங்களுக்கு பேருந்துகளை சிறப்பாக இயக்கி வருகின்றது. திருவிழா காலங்களில் வழிபாட்டுத்தலங்களான பழநி, சமயபுரம், நவக்கிரக கோயில்கள், தாயமங்கலம், நாகூர் மற்றும் ஏர்வாடி தர்கா போன்ற இடங்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

**குளிர்சாதனப் பேருந்துகள்**

துவக்கத்தில் 3 x 2 இருக்கை வசதிகளுடன் கூடிய குளிர்சாதனப் பேருந்துகள் திருச்சி மற்றும் கரூர் மண்டலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டன. அதிக பயணிகளை கவரும் பொருட்டு தற்போது 52 குளிர்சாதன பேருந்துகள் ஆறு மண்டலங்களிலும் இயக்கப்பட்டு வருகின்றன.

பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் மற்றும் பணிமனைகளின் சுற்றுச் சுவற்றில் விளம்பரம் செய்வதன் மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.

**சூரிய மின்னாற்றல்**

கும்பகோணத்திலுள்ள தலைமை அலுவலக கட்டடத்தின் மேற்கூரையில் 10 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய மின்னாற்றல் தகடு அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 20 சதவீத அளவிற்கு மின் கட்டணம் குறைந்துள்ளது.

## 2.21 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை.

இக்கழகம், மேலாண் இயக்குநரின் தலைமையின் கீழ் மதுரை மாநகரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. நகர், புறநகர் மற்றும் மலைப்பகுதிகளில் பேருந்து சேவைகளை கண்காணிக்க, மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

- 31.07.2021 அன்றுள்ளவாறு, இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 40 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை

2,328 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 2,166 ஆகும்.

- 31.07.2021 அன்றுள்ளவாறு, இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 14,320 ஆகும். இக்கழகம், சாதாரணம், விரைவு மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- இக்கழகத்தில் மதுரை, வத்தலக்குண்டு மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் உள்ளன.

- பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் மற்றும் பணிமனைகளின் சுற்றுச் சுவற்றில் விளம்பரம் செய்வதன் மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.

- மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் மண்டலங்களில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஓட்டுதல் ஒத்த கருவி (Simulator) மூலம் 210 ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- பணிமனைகள் / மண்டல அலுவலக கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய மின்னாற்றல் தகடு அமைக்கப்பட உள்ளது.

- இக்கழகத்தில் பயணிகளின் வசதிக்கேற்ப நகர மற்றும் புறநகர் பேருந்துகளில் பயணம் செய்ய ஏதுவாக மாதாந்திர சலுகைக் கட்டண அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டு வருகிறது.
- இப்போக்குவரத்துக் கழகத்தால் 30 இரவு நகரப் பேருந்து சேவைகள் இயக்கப்பட்டு வருகின்றன.
- மதுரை நகரில் இயக்கப்படும் 75 பேருந்துகளில் பேருந்து நிறுத்தத்தின் பெயரை முன்னரே அறிவிப்பு செய்யும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- திருவிழாக்களை முன்னிட்டு இக்கழகத்தினால் பின்வரும் இடங்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | வீரபாண்டி | 6. | அழகர்கோயில் |
| 2. | இருக்கன்குடி | 7. | திருச்செந்தூர் கோயில் |
| 3. | வேளாங்கன்னி | 8. | மாசாணியம்மண் கோயில் |
| 4. | பழநி | 9. | திருவண்ணாமலை கோயில் |
| 5. | சபரிமலை ஐயப்பன் திருக்கோயில் | 10. | திருப்பரங்குன்றம் கோயில் |

- வெளி மாநிலங்களிலிருந்து மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வழிபட வரும் பக்தர்களின் வசதிக்காக நான்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

- மதுரை, அதிகமான சுற்றுலா தலங்களை கொண்ட ஒரு பண்டைய நகரம் என்பதால், மதுரையிலிருந்து 10 கி. மீ தூரத்தில் உள்ள திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கும், சுமார் 23 கி.மீ தொலைவில் உள்ள கள்ளழகர் திருக்கோயிலுக்கும் பொதுமக்களின் தேவைகளின் அடிப்படையில் சுற்றுலா பேருந்துகளை இக்கழகம் இயக்கி வருகின்றது.

## 2.22 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி

இக்கழகம், மேலாண் இயக்குநர் தலைமையின் கீழ், திருநெல்வேலி நகரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. போக்குவரத்து சேவையை நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் கண்காணித்து மேம்படுத்த, திருநெல்வேலி, நாகர்கோயில் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம் நகர் மற்றும் புறநகர் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- 31.07.2021 அன்றுள்ளவாறு, இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 30 ஆகும். இப்போக்குவரத்துக் கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 1,773 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,661 ஆகும். இக்கழகத்தின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 10,615 ஆகும். இக்கழகம், சாதாரணம், விரைவு, அதி சொகுசு, மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- இப்போக்குவரத்துக் கழகத்தால் திருச்செந்தூர், சங்கரன் கோயில், திருவில்லிபுத்தூர், உவரி, கன்னியாகுமரி மற்றும் குற்றாலம் போன்ற முக்கிய சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

- இக்கழகத்தால் இரவு பேருந்து சேவைகள் திருநெல்வேலி நகரத்திலும் மற்றும் நாகர்கோயில் நகரத்திலும் இயக்கப்பட்டு வருகின்றது.

- திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் நாகர்கோயில் மண்டலத்தின் 24 வழித்தடங்களில் 53 தனி நடைகள் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கென இயக்கப்பட்டு வருகின்றன.

- பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் மற்றும் பணிமனைகளின் சுற்றுச் சுவற்றில் விளம்பரம் செய்வதன் மூலம் இக்கழகம் கூடுதல் வருவாயை ஈட்டுகிறது.

- ஓட்டுநர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கும் பொருட்டு ஓட்டுநர் பயிற்சி ஓடுதளம் கன்னியாகுமரியிலுள்ள ராணித்தோட்டத்தில் கட்டப்பட்டுள்ளது.

## அத்தியாயம்-3

## தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்

### 3.1 தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் அறிமுகம்.

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனமானது தமிழக அரசிற்கு சொந்தமான வங்கியல்லாத நிதி நிறுவனமாகும். இந்நிறுவனம் இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கியல்லாத நிதி நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு, 25.03.1975 அன்று தொடங்கப்பட்டது. பொது மக்கள், அரசு துறைகள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து வைப்பீடுகள் பெற்று தமிழகத்தில் உள்ள அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவையான மூலதனம் மற்றும் நடைமுறை மூலதன நிதியுதவியை பூர்த்தி செய்வதே தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

### 3.2 நிதிச் செயல்பாடு

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட 1975-ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு

ஆண்டிலும் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. இந்நிறுவனம் கடந்த 2019-2020-ஆம் ஆண்டிலிருந்து ஈட்டிய இலாபம் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சங்களில்)

| ஆண்டு | வட்டி தள்ளுபடிக்கு முந்தைய இலாபம் | அ.போ. கழகங்களுக்கு வட்டி தள்ளுபடி செய்தது | வட்டி தள்ளுபடிக்கு பின்பும் ஆனால் வருமான வரிக்கு முன்பும் இலாபம் | வருமான வரி | வருமான வரிக்குப் பிந்தைய இலாபம் |
|---|---|---|---|---|---|
| 2019-2020 | 1874.64 | - | 1874.64 | 656.24 | 1218.40 |
| 2020-2021 | 6145.75 | - | 6145.75 | 1236.72 | 4909.03 |
| 2021-2022 (ஜீலை 2021 வரை) | 2083.29 | - | 2083.29 | 524.32 | 1558.97 |

## 3.3 வைப்பீடுகள்

இந்நிறுவனம் பொது மக்கள் மற்றும் இதர முதலீட்டாளர்களிடம் முதலீட்டிற்கு ஏற்ற நிறுவனம் என்ற நம்பகத்தன்மையைத் தொடர்ந்து பெற்று வந்துள்ளது. 31.07.2021 அன்றுள்ளபடி, இந்நிறுவனத்தில் செய்துள்ள மொத்த வைப்புத்தொகை ரூபாய் 7,228.56 கோடியாகும்.

## 3.4 வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள்

வைப்பீடுகளுக்கான வட்டி வீதம் சந்தை நிலவரத்திற்கேற்பவும், போக்குவரத்துக் கழகங்களின் நிதித் தேவை மற்றும் கடனை திருப்பிச் செலுத்தும் தன்மைக்கேற்ப மாற்றியமைக்கப்படுகின்றது. வட்டி வீதங்கள், பிற அரசு நிதி நிறுவனங்களால் கொடுக்கப்படும் வட்டி வீதங்களுக்குகேற்ப நிர்ணயிக்கப்படுகிறது. தற்போதைய வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள் பின்வருமாறு:-

| காலம் | வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள் (கூட்டு வட்டி காலாண்டு அடிப்படையில் கணக்கிடப்படுகிறது) 18.01.2021 முதல் | |
|---|---|---|
| | பொதுமக்கள் | மூத்த குடிமக்கள் |
| 12 மாதங்கள் | 7.00% | 7.25% |
| 24 மாதங்கள் | 7.25% | 7.50% |
| 36-லிருந்து 48 மாதங்கள் | 7.75% | 8.25% |
| 60 மாதங்கள் | 8.00% | 8.50% |

### 3.5 வைப்பீட்டுத் திட்டங்கள்

தற்போது கீழ்க்கண்ட இரு வைப்பீட்டுத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

| விவரம் | திட்டம் 1<br>குறித்த காலம்தோறும் வட்டி வழங்கும் திட்டம் | திட்டம் 2<br>பணப்பெருக்குத் திட்டம் |
|---|---|---|
| குறைந்தபட்ச வைப்பீடு | ரூபாய் 50,000/- | ரூபாய் 50,000/- |
| காலம் (மாதங்களில்) | 24, 36, 48 மற்றும் 60 | 12, 24, 36, 48 மற்றும் 60 |
| வட்டி வழங்கும் வீதம் | 24 மாதங்கள் – காலாண்டு 36 - 60 மாதங்கள் -மாதந்தோறும், காலாண்டு மற்றும் ஆண்டு வட்டி | முதிர்வுறும்போது (கூட்டு வட்டி காலாண்டு அடிப்படையில் கணக்கிடப்படுகிறது) |

### 3.6 பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட வைப்பீடுகள்

இத்திட்டம் தமிழக அரசால் சமூக நலத்துறையின் மூலம் வழங்கப்படும் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டமாகும். 31.07.2021 அன்றுள்ளவாறு, இத்திட்டத்தின்கீழ் 83,657 வைப்பீடுதாரர்களின் மூலம் பெறப்பட்ட வைப்பீடு ரூ.12.67 கோடியாகும்.

## 3.7 நிறுவனத்தின் நிதி நிலை

31.07.2021 அன்றுள்ளவாறு, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் மொத்த நிதி ஆதாரங்கள் பின்வருமாறு:

**(ரூபாய் கோடியில்)**

| | | |
|---|---|---|
| பங்கு மூலதனம் –<br>அ) அரசு பங்குத்தொகை<br>ஆ) அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்குத்தொகை | 2032.10<br><br>18.71<br>------------------ | ------------------<br>2050.81 |
| இருப்புகள் மற்றும் உபரி | | 183.24 |
| வைப்பீடுகள் | | 7,228.56 |
| பாரத ஸ்டேட் வங்கி மற்றும் பரோடா வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் | | 3,439.00 |
| மொத்தம் | | **12,901.61** |

**3.8 கடன்கள்**

2021-2022 (ஜீலை 2021 வரை) ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்களுக்கு அளிக்கப்பட்ட கடன் உதவிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**(ரூபாய் கோடியில்)**

| **வகைகள்** | **தொகை** |
|---|---|
| 1. தவணைக் கொள்முதல் கடன்கள் | - |
| 2. வங்கியிடமிருந்து பெறப்பட்ட குறுகிய கால கடன் | - |
| 3. நடைமுறை மூலதனத்திற்காக பருவக் கடன்கள் | 3,333.17 |
| மொத்தம் | **3,333.17** |

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு அளித்த நிதியுதவி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**(ரூபாய் கோடியில்)**

| **ஆண்டு** | **நிதியுதவிகள்** |
|---|---|
| 2019-2020 | 6190.11 |
| 2020-2021 | 7725.25 |
| 2021-2022 (ஜீலை 2021 வரை) | 3,333.17 |

## 3.9 நிலுவையிலுள்ள கடன்கள் (31.07. 2021 அன்றுள்ளவாறு)

(ரூபாய் கோடியில்)

| அரசு போக்குவரத்துக் கழகங்கள் | நிலுவையிலுள்ள மூலதனம் | | | |
|---|---|---|---|---|
| | தவணைக் கொள்முதல் கடன்கள் | குறுகிய காலக் கடன்கள் | நீண்ட காலக் கடன்கள் | மொத்தம் |
| அ.போ.க (கோயம்புத்தூர்) லிட்., | 123.26 | 481.41 | 1,698.97 | 2,303.64 |
| அ.போ.க (கும்பகோணம்) லிட்., | 152.95 | 338.31 | 1,154.61 | 1,645.87 |
| அ.போ.க (மதுரை) லிட்., | 51.33 | 282.12 | 1,106.28 | 1,439.73 |
| மா.போ.க (சென்னை), லிட்., | 185.57 | 289.40 | 1,290.93 | 1,765.90 |
| அ.வி.போ.க தமிழ்நாடு, லிட்., | 202.33 | 159.62 | 1,019.95 | 1,381.90 |
| அ.போ.க (சேலம்) லிட்., | 123.95 | 244.70 | 982.66 | 1,351.31 |
| அ.போ.க (திருநெல்வேலி) லிட்., | 58.41 | 427.10 | 1,434.25 | 1,919.76 |
| அ.போ.க (விழுப்புரம்) லிட்., | 155.43 | 316.34 | 873.31 | 1,345.08 |
| **மொத்தம்** | **1,053.23** | **2,539.00** | **9,560.96** | **13,153.19** |

## 3.10 புதிய கடன்களுக்கு விதிக்கப்படும் வட்டி வீதம்

இந்நிறுவனம் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கிய புதிய கடன்களுக்கான வட்டி வீதம் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

| | வட்டி வீதம் | அன்றைய தேதியில் |
|---|---|---|
| தவணைக் கொள்முதல் கடன்கள் | 7.60% | 01.04.2019 |
| ரூ.600 கோடி தவணைக் கொள்முதல் கடன் (அரசாணை (நிலை) எண். 26, போக்குவரத்து (அ) துறை, நாள்: 28.02.2019). | 2.00% | 28.02.2019 |
| ரூ.302.06 கோடி தவணைக் கொள்முதல் கடன் (அரசாணை (நிலை) எண். 117, போக்குவரத்து (ட்டி1) துறை, நாள்: 10.7.2019). | 2.00% | 24.07.2019 |
| ரூ.150 கோடி தவணைக் கொள்முதல் கடன் (அரசாணை (நிலை) எண். 26, போக்குவரத்து (ட்டி1) துறை, நாள்: 26.02.2020). | 2.00% | 26.02.2020 |
| குறுகிய காலக் கடன்கள் (TDFC Fund) | 8.50% | 01.04.2019 |
| நீண்ட காலக் கடன்கள் (TDFC Fund) | 7.65% | |
| நீண்ட காலக் கடன்கள் | 8.15% | 01.04.2020 |
| ரூ.900 கோடி ரொக்க கடன் வசதி (பாரத ஸ்டேட் வங்கி) | 7.95% | 30.09.2019 |
| ரூ.1,200 கோடி குறுகிய காலக் கடன் (பாரத ஸ்டேட் வங்கி) | 7.20% | 29.06.2020 |
| ரூ.1,900 கோடி குறுகிய காலக் கடன் (பாரத ஸ்டேட் வங்கி) | 6.25% | 30.09.2020 |
| ரூ.639 கோடி குறுகிய காலக் கடன் (பரோடா வங்கி) | 6.25% | 26.03.2021 |

**3.11 போக்குவரத்துக் கழகங்களின் மூலதன ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல்**

அரசு போக்குவரத்துக் கழகங்கள் கொரோனா ஊரடங்கு மற்றும் வருவாய் பெருக்கமின்றி கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டதன் காரணமாக 2020-2021-ஆம் ஆண்டில் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு உதவும் பொருட்டு அவற்றின் செயல்பாட்டு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் பாரத ஸ்டேட் வங்கியிடமிருந்து ரூ.3,100 கோடியினை அரசு உத்தரவாதத்துடன் கடனாக பெற்று அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு கடனாக வழங்கியுள்ளது. மேற்படி தொகையில் ரூ.1200 கோடியை பாரத ஸ்டேட் வங்கியிடம் 22.04.2021 அன்று திருப்பிச் செலுத்தப்பட்டது. மேலும், எண்ணெய் நிறுவனங்களுக்கு அளிக்க வேண்டிய நிலுவைத் தொகையினை நேர்செய்யும் பொருட்டு ரூ.639 கோடியினை பரோடா வங்கியிடமிருந்து அரசு உத்தரவாதத்துடன் 26.03.2021 அன்று கடனாக பெற்று அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு கடனாக வழங்கியுள்ளது.

## அத்தியாயம்-4

## சாலை போக்குவரத்து நிறுவனம்

### 4.1 சாலை போக்குவரத்து நிறுவனம் ஓர் அறிமுகம்

சாலை போக்குவரத்து நிறுவனம் 1860-ஆம் ஆண்டின் சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு 1976-ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப்பட்டது. சாலை போக்குவரத்து நிறுவனம், பேருந்து போக்குவரத்து தொடர்பான மேம்பாட்டு பணிகள், சாலைப் பாதுகாப்பு ஆய்வு மற்றும் ஆராய்ச்சி பணிகள், பேருந்து தரம் மற்றும் பேருந்து மேலாண்மை, போக்குவரத்துக் கழக அலுவலர்கள் / பணியாளர்கள் புத்தாக்க பயிற்சி அளித்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. அரசு போக்குவரத்துக் கழகங்களால் கொள்முதல் செய்யப்படும் உதிரி பாகங்களின் தரத்தினை பரிசோதித்தல் பணியையும் செய்து வருகின்றது.

### 4.2 கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள்

சாலை போக்குவரத்து நிறுவனம், தற்போது கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையங்களை கும்மிடிபூண்டி,

திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து கீழ்கண்ட 15 இடங்களிலும் பயிற்சி அளித்து வருகிறது:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | திருவள்ளூர் | 6. | மதுரை | 11. | பொள்ளாச்சி |
| 2. | வேலூர் | 7. | திண்டுக்கல் | 12. | ஈரோடு |
| 3. | விழுப்புரம் | 8. | திருநெல்வேலி | 13. | கும்பகோணம் |
| 4. | சேலம் | 9. | நாகர்கோயில் | 14. | காரைக்குடி |
| 5. | தருமபுரி | 10. | விருதுநகர் | 15. | புதுக்கோட்டை |

இவ்வோட்டுநர் பயிற்சி பள்ளிகளில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மற்றும் புத்தாக்க பயிற்சி பெற்றோர் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2019-2020 வரை | 2020-2021 | 2021-2022 (ஜீலை 2021 வரை) |
| 1. | கும்மிடிப்பூண்டி | 23515 | 758 | 267 |
| 2. | திருச்சிராப்பள்ளி | 2519 | 48 | 19 |
| 3. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கனரக வாகன பயிற்சி மையங்கள் | 36248 | 305 | 116 |
| **மொத்தம்** | | **62282** | **1111** | **402** |
| 4 | புத்தாக்க பயிற்சிகள் (கும்மிடிப்பூண்டியில் மட்டும்) | 64011 | 1385 | 226 |

## 4.3 இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள்

1997-98-ஆம் ஆண்டு முதல் இரு இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் இயங்கி வருகிறது. தற்பொழுது ஈரோட்டில் உள்ள சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரியிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. இப்பள்ளிகளில் இதுவரை இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி முடித்தவர்களின் விவரம் வருமாறு:-

| வ. எண் | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2019-2020 வரை | 2020-2021 | 2021-2022 (ஜீலை 2021 வரை) |
| 1. | தரமணி, சென்னை | 2817 | 173 | 15 |
| 2. | திருச்சிராப்பள்ளி | 1069 | 30 | 13 |
| 3. | ஈரோடு | 350 | - | 16 |
| **மொத்தம்** | | **4236** | **203** | **44** |

மேலும் அரசு ஆணைப்படி, அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களின் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தலுக்காக ஒரு நாள் சிறப்புப் பயிற்சி நடத்தப்பட்டு

வருகிறது. இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயனடைந்தோர் விபரம் வருமாறு:-

| வ. எண் | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2019-2020 வரை | 2020-2021 | 2021-2022 (ஜீலை 2021 வரை) |
| 1. | தரமணி, சென்னை | 6747 | 342 | 50 |
| 2. | கும்மிடிப்பூண்டி | 3420 | 188 | 3 |
| 3. | திருச்சிராப்பள்ளி | 25254 | 345 | 19 |
| **மொத்தம்** | | **35421** | **875** | **72** |

## 4.4 திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டம்

போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி அட்டவணை தயாரிக்கப்பட்டு, சாலை போக்குவரத்து நிறுவனம், தரமணி மற்றும் சாலை போக்குவரத்து நிறுவன சாலை மற்றும் போக்குவரத்து தொழில் நுட்பக்கல்லூரி, ஈரோடு போன்ற இடங்களில் பயிற்சிகள்

நடத்தப்பட்டு வருகின்றது. 31.07.2021 அன்றுள்ளவாறு 1,944 பயிற்சிகளின் மூலம் மொத்தம் 41,055 போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

மேலும், போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்கள் பதவி உயர்வு பெறுவதற்கான தேர்வுகள் ஆண்டுதோறும் சாலை போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

### 4.5 சாலை போக்குவரத்து இதழ்

சாலை போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவு இதுவரை 526 ஆராய்ச்சி அறிக்கைகள், 30 ஆலோசனை அறிக்கைகள் வெளியிட்டுள்ளது. மேலும், அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகள் குறித்து விசாரணை நடத்துவதற்கு பயன்படும் வகையில் விபத்து விசாரணை கையேடு என்ற வழிகாட்டியினை வெளியிட்டுள்ளது.

இந்நிறுவனம், அரசு போக்குவரத்துக் கழகங்கள் பயன்பெறும் வகையில் தொழில்நுட்ப கையேட்டினை வெளியிட்டுள்ளது. சாலை போக்குவரத்து, சாலைப் பாதுகாப்பு,

மின்னணு பயணச்சீட்டு மற்றும் விபத்து ஒப்பீடு குறித்த தகவல்கள் அடங்கிய “சாலை போக்குவரத்து கையேடு” என்ற காலாண்டு இதழினை சாலை போக்குவரத்து நிறுவனம் வெளியிடுகிறது.

**4.6 கொள்முதல் நடவடிக்கைகள்**

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவையான முக்கிய பொருட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள், உருளிப்பட்டை, முழுவதுமாக கட்டப்பட்ட பேருந்துகள், பேருந்து கூண்டு கட்டுதல், பயணச்சீட்டு அச்சிடுதல், உருளிப்பட்டை புதுப்பிக்கத் தேவையான அடிப்படை பொருட்கள் மற்றும் மசகு எண்ணெய் (Lubricants) ஆகியவற்றினை வாங்குவற்கு சாலை போக்குவரத்து நிறுவனம் ஒருங்கிணைப்பு முகமையாக (Nodal Agency) செயல்பட்டு வருகிறது.

**4.7 கல்வி நிறுவனங்கள்**

போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகன ஆய்வு மற்றும் வளர்ச்சி பணிகளுக்காகவும், போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் வாரிசுதாரர்களின் நலனுக்காகவும், 1984 ஆம்

ஆண்டில் சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி இந்நிறுவனத்தால் ஈரோடு மாவட்டம் சித்தோட்டில் துவக்கப்பட்டது. இக்கல்லூரியில், இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் ஆண்டுதோறும் 462 மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். இக்கல்லூரியில் இதுவரை 9,902 மாணவர்கள் இளநிலை பொறியியலிலும் (பி.இ), 228 மாணாக்கர்கள் முதுகலை (கட்டடவியல்) பொறியியலிலும் (எம்.இ), 35 மாணாக்கர்கள் முதுகலை (கணினி) அறிவியலிலும் பட்டங்கள் பெற்றுள்ளனர். தற்போது இக்கல்லூரி உயர்கல்வி துறையின் கீழ் 2021-2022-ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுமென்றும், அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு 35 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்படுமென்றும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண்.165, (உயர்கல்வித் (ஜே2) துறை), நாள். 27.08.2021).

இக்கல்லூரியில் உள்ள மொத்த இடங்கள் மற்றும் நிரப்பப்படும் இடங்களின் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | விவரம் | மொத்த இடங்கள் | நிரப்பப்படும் இடங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | அரசு ஒதுக்கீட்டு இடங்கள் | நிருவாக ஒதுக்கீட்டு இடங்கள் |
| 1. | இளங்கலை பொறியியல் பட்டப் பிரிவு | 462 | 300 (65%) | 162 (35%) |
| 2. | முதுகலைப் பட்டம் (கட்டடவியல்) | 24 | 16 (65%) | 8 (35%) |
| 3. | முதுகலைப் பட்டம் (கணினி பொறியியல்) | 12 | 8 (65%) | 4 (35%) |

சாலை போக்குவரத்து நிறுவனத்தின் கீழ் மூன்று தொழில்நுட்ப பயிலக கல்லூரிகள், குரோம்பேட்டை, பர்கூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. தற்போது, இம்மூன்று தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் ஆண்டுதோறும் மொத்தம் 770 மாணவர்கள் பட்டய பொறியாளர் படிப்பில் நான்கு பிரிவுகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். 31.07.2021 அன்றுள்ளவாறு,

இம்மூன்று தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் சேர்த்து 10,107 மாணவர்கள் பட்டயங்கள் பெற்றுள்ளனர்.

இம்மூன்று தொழிநுட்ப பயிலகங்களில் உள்ள மொத்த இடங்கள் மற்றும் நிரப்பப்படும் இடங்களின் விவரம் பின்வருமாறு:

| **வ. எண்** | **விவரம்** | **மொத்த இடங்கள்** | **நிரப்பப்படும் இடங்களின் எண்ணிக்கை** | |
|---|---|---|---|---|
| | | | **அரசு ஒதுக்கீட்டு இடங்கள்** | **நிருவாக ஒதுக்கீட்டு இடங்கள்** |
| 1. | பட்டய பொறியியல் | 770 | 385 (50%) | 385 (50%) |

## 4.8 உபகரணங்கள் பரிசோதனை மற்றும் தரக் கண்காணிப்பு

சாலை போக்குவரத்து நிறுவனத்திலுள்ள உபகரணங்கள் பரிசோதனைக் கூடத்தில் 54 வகையான மோட்டார் வாகன உதிரிபாகங்கள் ASRTU மற்றும் BIS விவரக் குறிப்பீடுகளின்படி, பரிசோதனை செய்யும் வசதி உள்ளது. இப்பரிசோதனைக் கூடத்தில் 31.07.2021 அன்றுள்ளவாறு 5,916 மாதிரிக் கூறுகள் (Samples) பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

## அத்தியாயம்-5

## பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு

பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழுவானது, 1984-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரூ.50 லட்சம் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன், ரூ.10 லட்சம் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்துடன், தமிழக அரசின் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக தொடங்கப்பட்டது. சாலை போக்குவரத்துத் தொடர்பான ஆலோசனைகள் வழங்குவதே இந்நிறுவனத்தின் முக்கிய அடிப்படை நோக்கமாகும்.

இந்நிறுவனம் தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் தயாரிப்பு, ஆவணங்களை கணினி மயமாக்குதல், போக்குவரத்துப் பணி, அறிவார்ந்த போக்குவரத்து முறைகள் ஆகிய பல்வேறு துறைகளில் தனது ஆலோசனை சேவைகளை அளித்துவருகிறது. இந்நிறுவனம் பின்வரும் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது 1. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்காக, சென்னை பேருந்து விரைவுப் போக்குவரத்து அமைப்பு (BRTS)-க்கான விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரித்தல், 2. நிகழ்நிலை இணையதள முன்பதிவு வசதியை கண்காணித்தல் மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு மேற்கொள்ளுதல்.

# அத்தியாயம்-6

## தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை

### 6.1 தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை ஓர் அறிமுகம்

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசுத்துறை வாகனங்களின் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக இயக்குநரை துறைத் தலைவராகக் கொண்டு, தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயங்கி வருகிறது. பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் 20 அரசு தானியங்கி பணிமனைகளையும், அவைகளின் செயல்பாடுகளை முறையாக கண்காணித்து, நடைமுறைப்படுத்த திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் மூன்று மண்டல துணை இயக்குனரகங்கள் செயல்பட்டுவருகின்றன.

இத்துறையின் கீழ் இருபது அரசு தானியங்கி பணிமனைகள் பின்வரும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 6 | வேலூர் | 11 | கடலூர் | 16 | இராமநாதபுரம் |
| 2 | சேலம் | 7 | ஈரோடு | 12 | காஞ்சிபுரம் | 17 | திருநெல்வேலி |
| 3 | தருமபுரி | 8 | திருச்சிராப்பள்ளி | 13 | விழுப்புரம் | 18 | விருதுநகர் |
| 4 | கோயம்புத்தூர் | 9 | தஞ்சாவூர் | 14 | மதுரை | 19 | தூத்துக்குடி |
| 5 | உதகமண்டலம் | 10 | திண்டுக்கல் | 15 | சிவகங்கை | 20 | நாகர்கோயில் |

அரசுத் துறை ஊர்திகளுக்கான தரமான பராமரிப்பு பணிகளை சிக்கனமான செலவில் திறம்பட அளிப்பதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

### 6.2 அரசு மத்திய தானியங்கி பணிமனை

சென்னை அரசு மத்திய தானியங்கி பணிமனை, பொதுமேலாளர் அவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகிறது. இப்பணிமனையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பாதுகாப்பு வாகனங்கள், அமைச்சர் பெருமக்கள், முக்கிய பிரமுகர்கள், அரசு செயலாளர்கள் மற்றும் அரசு துறை அலுவலர்கள் ஆகியோரின் வாகனங்களின் பாராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. புதிய தொழில்நுட்பம், எரிபொருள் சிக்கனம், பாதுகாப்பு போன்றவற்றினை

கருத்திற்கொண்டு அரசு துறைக்கு புதிய தலைமுறை வாகனங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. அவ்வாகனங்கள் அரசு மத்திய தானியங்கி பணிமனையில் பராமரிப்பு செய்யப்படுகின்றன.

## 6.3 மாவட்டங்களில் உள்ள அரசு தானியங்கி பணிமனைகள்

திருச்சி, மதுரை மற்றும் சேலத்தில் மண்டல துணை இயக்குநரின் கட்டுப்பாட்டில் மூன்று அரசு தானியங்கி பணிமனைகள் இயங்கி வருகின்றன. பிற சார்நிலை அலுவலகங்கள் கோயம்புத்தூர், வேலூர், தருமபுரி, நாகர்கோயில், கடலூர், ஈரோடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், காஞ்சிபுரம், திருநெல்வேலி மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் உள்ள அரசு தானியங்கி பணிமனைகள், தானியங்கி பொறியாளர் கட்டுப்பாட்டிலும், தூத்துக்குடி, விழுப்புரம், உதகமண்டலம், விருதுநகர் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் உள்ள அரசு தானியங்கி பணிமனைகள் பொது முதலாள் / தொழில்நுட்ப உதவியாளரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.

சுமார் 21,469 அரசுத்துறை வாகனங்களை இத்துறை பராமரித்து வருகிறது. முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசுச் செயலர்களின் வாகனங்களுக்கான சிறுசிறு பழுதுகளை நீக்கி, பராமரிப்பு சுத்திகரிப்புப் பணிகளை கவனிப்பதற்காக சேவை மையம் மற்றும் இவ்வாகனங்களுக்குத் தேவையான எரிபொருள் வழங்கும் நிலையம் சென்னையில் தலைமைச் செயலகத்தின் அருகில் செயல்பட்டு வருகிறது. அரசுத் துறை ஊர்திகளுக்கு எரிபொருள் வழங்குவதற்காக இத்துறையின் பல்வேறு பணிமனைகளில் மொத்தம் 10 எரிபொருள் கிடங்குகள் செயல்பட்டு வருகின்றன.

2021-2022-ஆம் நிதியாண்டில் (31.07.2021 வரை), இத்துறையின் மூலம் பழுதுநீக்கம் செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 7,790 ஆகும்.

மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கும் திருச்சி, சேலம் மற்றும் மதுரை ஆகிய அரசு தானியங்கி பணிமனைகளில் அரசு துறை ஓட்டுநர்களின் பணித்திறமையை மேம்படுத்தவும் அவர்களுக்கு புத்தாக்க

பயிற்சி, அவ்வப்போது அளிக்கும் பொருட்டு ஓட்டுநர் பயிற்சி நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன.

### 6.4 அரசு தானியங்கி நடமாடும் பணிமனை

அரசு தானியங்கி பணிமனை இல்லாத பிற மாவட்டங்களில் இயக்கப்படும் அரசு துறை ஊர்திகள் அருகில் உள்ள அரசு தானியங்கி பணிமனைகளுக்கு பழுது நீக்குவதற்காக எடுத்துச் செல்லப்படுகின்றன. இதனால் ஏற்படும் எரிபொருள் செலவு மற்றும் கால விரயத்தினை தவிர்க்கும் பொருட்டு தேவையான ஆய்வு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அரசு தானியங்கி நடமாடும் பணிமனையினை முன்னோட்ட அடிப்படையில் திருச்சி மற்றும் தஞ்சாவூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

இந்நடமாடும் அரசு தானியங்கி பணிமனைகள் அருகில் அமைந்துள்ள அரசு தானியங்கி பணிமனை இல்லாத மாவட்டங்களான புதுகோட்டை, அரியலூர், பெரம்பலூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை

ஆகியவற்றிற்கு நேரடியாகச் சென்று அங்கு இயக்கப்படும் அரசு துறை வாகனங்களுக்கு பழுதுகளை நீக்கி வருகின்றன.

### 6.5 அரசு துறை வாகனங்களை கழிவு செய்தல்

இத்துறை, அரசாணை (நிலை) எண்.2275, உள்(போக்குவரத்து-இ) துறை நாள். 10.10.1990-இன் மூலம் வெளியிடப்பட்ட வழிக்காட்டுதலின்படி அரசு வாகனங்களை கழிவு செய்து வருகிறது. மேலும் ஒன்றிய அரசு / அரசு நிறுவனங்கள் / அரசு வாரியங்கள் ஆகியவற்றின் வாகனங்களை நடைமுறையிலுள்ள வழிகாட்டுதலின்படி, கழிவு செய்ய இத்துறை தகுதிபெற்றுள்ளது.

அரசாணை (நிலை) எண்.51. போக்குவரத்து (எச்-2) துறை, நாள்.06.05.2019-இன்படி கழிவு செய்யப்பட்ட அரசு துறைகளுக்கு சொந்தமான வாகனங்களை மின்னணு ஏல விற்பனை முறையில் (E-auction) திருவாளர்கள் எம்.எஸ்.டி.சி (M/s. MSTC) மூலம், வாகன சான்று புத்தகத்தை அதற்குண்டான மண்டல போக்குவரத்து அதிகாரியிடம் ஒப்படைப்பு செய்தபின், இத்துறை கழிவு செய்து வருகிறது.

01.04.2021 முதல் 31.07.2021 வரை பயனற்றதென கழிவு செய்யப்பட்ட அரசு துறை வாகனங்களின் எண்ணிக்கை

| கனரக மோட்டார் வாகனங்கள் | மகிழுந்து | ஈப்பு | வேன் | மோட்டார் சைக்கிள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 10 | 26 | 60 | 21 | 63 | 180 |

## அத்தியாயம் -7

## துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு

### விமான நிலையங்கள் மற்றும் ரயில்வே திட்டங்கள்

7.1 தமிழ்நாடு மாநிலத்தில் நில நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் விமான நிலையங்களை விரிவாக்கம் செய்வதற்கும், புதிய இரட்டை இரயில் பாதை / இரயில் பாதை உருவாக்குவதற்கும் நிலங்களை கையகம் செய்து இரயில்வே துறை மற்றும் விமான போக்குவரத்துத் துறைக்கு வழங்குவதற்கு போக்குவரத்துத் துறை முகமை துறையாக செயல்படுகிறது.

### 7.2 தமிழ்நாட்டில் விமான நிலைய விரிவாக்கத் திட்டங்கள்

2007-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கொள்கை முடிவின்படி புதிய விமான நிலையம் அமைக்கவும், விரிவாக்கம் செய்யவும் நிலங்களை கையகப்படுத்தி, அதை இலவசமாகவும், எந்தவித வில்லங்கமும் இல்லாமல் விமான நிலைய ஆணையத்திற்கு ஒப்படைக்கப்படுகிறது.

## சென்னை விமான நிலையம்:

இந்திய விமான நிலைய ஆணையம் 64.57 ஏக்கர் பட்டா நிலம் கையகம் செய்யவும் மற்றும் 11.58 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தை நில உரிமை மாற்றம் செய்யவும் மாநில அரசை கேட்டுக் கொண்டுள்ளது. ஓடுபாதைகள் விரிவாக்கம், எளிய அணுகுமுறை விளக்கு வசதி, ஹேங்கர்கள் கட்டுதல் மற்றும் இணையான டாக்ஸி டிராக் கட்டுமானம், கேட் (CAT) அணுகுமுறை விளக்கு நிறுவுதல், எரிபொருள் பண்ணை நிறுவுதல் போன்றவற்றுக்காக பட்டா நிலத்தை கையகப்படுத்தும் பணி பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது.

மேலும், பாதுகாப்பு அமைச்சகத்திற்கு சொந்தமான 16.89 ஏக்கர் நிலத்தை இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு நில மாற்றம் செய்ய தனியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## மதுரை விமான நிலையம்:

தென் மாவட்டங்களில் உள்ள முக்கியமான விமான நிலையங்களில் ஒன்றான மதுரை விமான நிலையம், மதுரை

மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களின் தேவைகளை பூர்த்தி செய்கிறது. அதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, இந்திய விமான நிலைய ஆணையம் மதுரை விமான நிலையத்தினை விரிவாக்கம் செய்ய முடிவு செய்தது. அதன்படி நிலத் திட்ட அட்டவணை பெறப்பட்டு, 460.15 ஏக்கர் பட்டா நிலத்தை கையகப்படுத்த நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது, அவை கையகப்படுத்தப்பட்டு இந்திய விமான நிலைய ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. விமான நிலைய விரிவாக்கத்திற்கு தேவையான 161.53 ஏக்கர் புறம்போக்கு நிலங்களில் 75.38 ஏக்கர் ஏற்கனவே நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. மீதமுள்ள 86.15 ஏக்கர் (நீர்நிலை புறம்போக்கு) நில உரிமை மாற்றம் செய்வதற்கு நில நிருவாக ஆணையர் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது.

**கோயம்புத்தூர் விமான நிலையம்:**

கோயம்புத்தூர் விமான நிலையத்தில் ஓடுதளம் விரிவாக்கத்திற்காக 612.97 ஏக்கர் பட்டா / புறம்போக்கு நிலத்தை கையகப்படுத்தி / நில உரிமை மாற்றம் செய்து மேற்படி நிலங்களை இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு எவ்வித வில்லங்கம் இன்றி இலவசமாக

வழங்கிட அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. கள ஆய்வின் போது, கோரப்பட்ட அசல் நிலப்பரப்பளவு 627.89 ஏக்கராக (612.97+14.92) அதிகரிக்கப்பட்டுள்ளது. அவற்றில், 490.27 ஏக்கர் (461.90 ஏக்கர் பட்டா மற்றும் 28.37 ஏக்கர் புறம்போக்கு நிலங்கள்) நிலங்களுக்கு திருத்தப்பட்ட நிருவாக அனுமதி 2017-இல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 28.37 ஏக்கர் புறம்போக்கு நிலம் மற்றும் 3.3 ஏக்கர் பிற துறை சார்ந்த நிலம் போன்றவற்றை நில உரிமை மாற்றம் செய்ய கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், 134.54 ஏக்கர் பாதுகாப்புத் துறை சார்ந்த நிலங்கள் கோயம்புத்தூர் விமான நிலைய விரிவாக்கத்திற்காக தேவைப்படுவதால், மேற்படி நிலத்தை இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### திருச்சிராப்பள்ளி விமான நிலையம்:

திருச்சிராப்பள்ளி விமான நிலைய விரிவாக்கத்திற்காக, 294.06 ஏக்கர் பட்டா நிலம், 33.23 ஏக்கர் புறம்போக்கு நிலம் மற்றும் 337.49 ஏக்கர் பாதுகாப்புத் துறை நிலம் ஆகியவற்றை

கையகப்படுத்த அரசால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை, 38.88 ஏக்கர் பட்டா நிலம் மட்டும் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 255.18 ஏக்கர் பட்டா நிலங்களை கையகப்படுத்துதல் தொடர்பான நடவடிக்கைகள் பல்வேறு நிலைகளில் உள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரால் 33.23 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் சென்னை நில நிருவாக ஆணையருக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், விரிவாக்க நோக்கத்திற்காக தேவைப்படும் 337.49 ஏக்கர் பரப்பளவில் பாதுகாப்புத் துறை நிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. பாதுகாப்புத் துறை நிலங்களுக்கு பதிலாக மாற்று நிலத்தை வழங்க மாநில அரசு பரிந்துரைத்துள்ளது.

**சேலம் விமான நிலையம்:**

சேலம் விமான நிலைய விரிவாக்கத்திற்காக தேவைப்படும் 535.10 ஏக்கர் பட்டா நிலத்தை கையகப்படுத்தவும், 32.33 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம்

செய்யவும் அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. பட்டா நிலங்களை கையகம் செய்வது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பான நடவடிக்கைகள் மாவட்ட ஆட்சியரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தூத்துக்குடி விமான நிலையம்:**

தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கத்திற்காக தேவைப்படும் 605.77 ஏக்கர் நிலம் கையகப்படுத்துதல்/ நில உரிமை மாற்றம் செய்தல் போன்றவற்றிற்காக அரசு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான பணிகள் முடிவடைந்து, இந்திய விமான நிலைய ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கத்திற்காக தேரி சாலையை மாற்றுவதற்கு 96.79 ஏக்கர் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 7.3 மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டம் (உதான்)

குறைந்த விலையில் விமானப் பயணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, ஒன்றிய அரசின் விமானப்

போக்குவரத்து அமைச்சகம் மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தை (உதான்) அறிமுகப்படுத்தியுள்ளது. தமிழக அரசு மண்டலங்களுக்குள் விமான நிலைய இணைப்பு (உதான்) திட்டத்தை செயல்படுத்த ஒன்றிய அரசின் விமான போக்குவரத்து அமைச்சகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. மண்டலங்களுக்கு இடையேயான விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தின் கீழ் உள்ள விமான நிலையங்களுக்கு பின்வரும் சலுகைகள் தமிழக அரசால் வழங்கப்படுகின்றன.

- இத்திட்டத்தின் கீழ் இயங்கும் விமான நிலையங்கள் மற்றும் விமானங்களுக்கு வழங்கப்படும் விமான எரிப்பொருளுக்கான (Air Turbine fuel) மதிப்பு கூட்டு வரி (VAT) 1% ஆக குறைக்கப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் உள்ள விமான நிலையங்களுக்கு பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு சேவைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

- 20% சாத்தியக் கூறு இடைவெளி நிதி (Viability Gap Fund) தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின் மூலம் விமானம் இயக்கும் நிறுவனத்திற்கு (Air Line Operators) வழங்கப்பட்டு வருகிறது.

- உதான் திட்டத்தின்கீழ் செயல்பாட்டிற்கு வரும் ஒவ்வொரு விமான நிலையத்திற்கும் 50% இருக்கைகளேனும் விற்பனை செய்யப்படுவதை உறுதிசெய்ய வேண்டுமென்ற நிபந்தனையுடன் கூடிய உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**அ) சேலம் விமான நிலையம்**

- சேலம் விமான நிலையத்திலிருந்து 25.03.2018 முதல் விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இது பயணிகளிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

**ஆ) நெய்வேலி விமான நிலையம்**

- நெய்வேலி விமான நிலையத்தில் விமானங்களை இயக்குவதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் தயாராக உள்ளன. விமான போக்குவரத்து இயக்குனரகத்தின் உரிமம் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விமான நிலையத்திலிருந்து விமானங்கள் விரைவில் இயக்கப்படும்.

**இ) ஓசூர் விமான நிலையம்**

- ஓசூர் விமான நிலையத்தை மேம்படுத்துவதற்காக தமிழக அரசு தேவையான அனைத்து

நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. மேலும், இந்த தனியார் விமான நிலையத்தினை பொது விமான நிலையமாக மாற்றுவதற்கு ஒன்றிய அரசின் விமான போக்குவரத்து அமைச்சகத்தின் சில பிரிவுகள் தொழில்நுட்ப சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்தது. பயணிகளுக்கு தேவையான வசதிகள் இந்த விமான நிலையத்தில் இல்லாமலிருந்த போதிலும், தொழில்நுட்பக் குழு இவ்விமான நிலையத்தினை ஆய்வு செய்து, கட்டுமானம் மற்றும் மின்சாரப் பணிகளை மேற்கொள்வதற்கும் தற்போதுள்ள ஓடுதளத்தின் இரண்டு பகுதிகளிலும் 75 மீட்டர் விரிவாக்கம் செய்யவும் தோராயமாக ரூ.30 கோடி தேவையென்று மதிப்பீடு செய்தது. ஒன்றிய அரசின் விமான போக்குவரத்து அமைச்சக தொழில்நுட்பக் குழு தெரிவித்தவாறு பயணிகளுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக கட்டுமானப் பணிகள் மற்றும் மின்சாரப் பணிகளுக்குத் தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்வதுடன் தற்போதுள்ள ஓடுதளத்தினை இருபக்கமும் விரிவாக்கம் செய்வதற்கு தேவையான 75 மீட்டர் நிலத்தினை கையகம் செய்து ஒப்படைக்குமாறு தமிழக அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. தமிழக அரசும் ஓசூர் விமான

நிலையத்தை ஒரு முழுமையான விமான நிலையமாக மாற்றுவதற்கு தேவையான முதலீடு செய்வதற்கு தனது இசைவினைத் தெரிவித்துள்ளது.

**ஈ) வேலூர் விமான நிலையம்**

- இரண்டாம் உலகப்போரின் போது இருந்த வேலூர் விமான நிலையத்தினை தற்போது விரிவுபடுத்திட 10 ஏக்கர் பட்டா மற்றும் 51.57 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை கையகம் / நில உரிமை மாற்றம் செய்திட அரசின் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நில எடுப்பு பணிகள் மற்றும் மாநில நெடுஞ்சாலையை மாற்றியமைக்கும் பணிகள் தற்பொழுது நடைப்பெற்று வருகின்றன.

### 7.4 (அ) இரட்டை இரயில் பாதை திட்டங்கள்

## விழுப்புரம் – திண்டுக்கல் இரட்டை அகல இரயில் பாதை மற்றும் மின்மயமாக்கல் திட்டம்.

இத்திட்டம், தமிழகத்தின் வடக்கு மற்றும் தெற்கு மாவட்டங்களை இணைத்து அதிக பயணிகளின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்யும் மதிப்புமிக்க திட்டமாகும். இத்திட்டத்திற்காக விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள 319.93 ஏக்கர் பட்டா நிலம், 121.67 ஏக்கர் புறம்போக்கு நிலம், இரட்டை அகல இரயில்பாதை மற்றும் மின்மயமாக்கல் திட்டத்தின்கீழ் நில எடுப்பு செய்ய நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 144.16 ஏக்கர் பட்டா நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 175.77 ஏக்கர் பட்டா நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளது. முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டதின் அடிப்படையில் இரட்டை இரயில் பாதை அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளது. இதனை வருவாய் பதிவேடுகளில் பதிவு செய்யும் நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புறம்போக்கு நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பான நடவடிக்கை மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது.

## ஓமலூர் – மேட்டூர் அணை இரட்டை அகல இரயில் பாதை திட்டம்

இத்திட்டத்திற்காக சேலம் மாவட்டத்தில் உள்ள 15 கிராமங்களில் 61.16 ஏக்கர் பட்டா நிலம் மற்றும் 11.00 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை கையகம் செய்ய நிருவாக அனுமதி வழங்கி நில எடுப்பு செய்யும் பணி நிறைவடைந்து வருவாய் பதிவேடுகளில் பதியும் பணி நடைபெற்று வருகிறது. புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பான நடவடிக்கை மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது.

## மதுரை – தூத்துக்குடி இரட்டை அகல இரயில் பாதை திட்டம்

இவ்வழித்தடம் மதுரை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களின் வழியாகச் செல்கிறது. இம்மாவட்டங்களில் உள்ள 245.23 ஏக்கர் பட்டா நிலம் மற்றும் 48.12 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால்

நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள சிறப்பு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, நில எடுப்புப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

## கன்னியாகுமரி – திருவனந்தபுரம் இரட்டை அகல இரயில் பாதை திட்டம்

இந்த இரயில் பாதையானது 3 வகையான வழித்தடங்களுக்கான அதாவது கன்னியாகுமரியிலிருந்து நாகர்கோயில் வரை, நாகர்கோவிலிலிருந்து இரணியல் வரை மற்றும் இரணியலில் இருந்து பாரசாலா வரையிலான வழித்தடங்களில் செல்கிறது. கன்னியாகுமரியில் இருந்து நாகர்கோயில் வரையிலான வழித்தடத்திற்கு தேவையான 10.81 ஏக்கர் நிலம் கையகம் செய்வதற்கும் மற்றும் நாகர்கோவிலிலிருந்து இரணியல் வரையிலான வழித்தடத்திற்கு தேவையான 26.25 ஏக்கர் நிலம் கையகம் செய்வதற்கும் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இரணியலிலிருந்து பாரசாலா வரையிலான வழித்தடத்திற்குத் தேவையான நிலம் எடுப்பதற்கு நிருவாக அனுமதி வழங்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

## மணியாச்சி – நாகர்கோயில் இரட்டை அகல இரயில் பாதை திட்டம்

இத்திட்டத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 3 மாவட்டங்கள் உள்ளடங்கியுள்ளன. மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள 208.41 ஏக்கர் பட்டா நிலம் மற்றும் 39.48 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை நில எடுப்பு செய்ய நிருவாக அனுமதியினை அரசு வழங்கியுள்ளது. நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள சிறப்பு பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு, நில எடுப்பு பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

### (ஆ) புதிய இரயில்வே வழித்தடங்கள்

## மீளவிட்டான் – மேலமருதூர் (மதுரை – தூத்துக்குடி வழி அருப்புகோட்டை) புதிய அகல இரயில் பாதை திட்டம்.

இப்புதிய இரயில் பாதை தூத்துக்குடி துறைமுகம் மற்றும் இப்பகுதியில் வரவிருக்கும் மின் உற்பத்தி நிலையங்களுக்கு முக்கிய இணைப்பை வழங்கும். தூத்துக்குடி மாவட்டத்தில் 175.58 ஏக்கர் பட்டா நிலம் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்டு தெற்கு இரயில்வேயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் தாலுகாவில் உள்ள வாளசமுத்திரம் கிராமத்தில் பாலம் அமைப்பதால் 200 மீட்டர் தூரத்தைத் தவிர

வடசிலுக்கான் பட்டியிலிருந்து மேலமருதூர் வரை சுமார் 17.15 கி.மீ தூரத்திற்கு இரயில் பாதை அமைக்கும் பணி ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ளது. 10.47 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பான கருத்துரு மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது.

## சின்னசேலம் – கள்ளக்குறிச்சி அகல இரயில் பாதை திட்டம்

இது சின்னசேலத்திலிருந்து கள்ளக்குறிச்சியை 16 கி.மீ. தூரத்திற்கு இணைக்கும் புதிய ரயில் பாதை ஆகும். கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் 11 கிராமங்களில் 118.63 ஏக்கர் பட்டா நிலம் மற்றும் 7.51 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை கையகப்படுத்த அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. 36.60 ஏக்கர் பட்டா நிலங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டு தெற்கு இரயில்வேயிடம் நிலம் ஒப்படைக்கப்பட்டது. மீதமுள்ள 74.52 ஏக்கர் பட்டா நிலத்தை கையகப்படுத்துவது தொடர்பான நடவடிக்கை பல்வேறு கட்டங்களில் உள்ளது. 7.51 ஏக்கர் புறம்போக்கு நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பான நடவடிக்கை மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது.

## திண்டிவனம் – நகரி அகல இரயில் பாதை திட்டம்

இத்திட்டம் திண்டிவனம் (தமிழ்நாடு) - நகரி (ஆந்திர பிரதேசம்) இடையே, விழுப்புரம் திருவண்ணாமலை, ராணிப்பேட்டை மற்றும் திருவள்ளூர் ஆகிய நான்கு மாவட்டங்களை கடந்து செல்லும் வகையில் இரயில் பாதை அமையவுள்ளது. 1345.22 ஏக்கர் பட்டா நிலம் மற்றும் 299.89 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை கையகப்படுத்த அரசு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 194.61 ஏக்கர் நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1150.61 ஏக்கர் பட்டா நிலங்களை கையகப்படுத்துவது தொடர்பான நடவடிக்கை பல்வேறு நிலைகளில் உள்ளது. 299.89 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பான நடவடிக்கை மாவட்ட ஆட்சியர்களின் பரிசீலனையில் உள்ளது.

## சென்னை கடற்கரை – கொருக்குப்பேட்டை இடையே 3–வது மற்றும் 4–வது புதிய இரயில் பாதை திட்டம்

சென்னை கடற்கரை – கொருக்குப் பேட்டை இடையே 3-வது மற்றும் 4-வது புதிய இரயில் பாதை சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் வழியாக செல்கிறது. இது

சென்னை கடற்கரை மற்றும் கும்மிடிப்பூண்டி இடையே புறநகர் இரயில் பயணிகளின் சேவைக்காக அமைக்கப்பட்டுள்ளது. 506 சதுர மீட்டர் நிலப்பரப்பை கையகப்படுத்த அரசு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, இழப்பீட்டுத் தொகை வழங்கும் நிலையில் உள்ளது.

## கொருக்குப்பேட்டை – எண்ணூர் இடையே 4 வது புதிய இரயில் பாதை அமைக்கும் திட்டம்

கொருக்குப்பேட்டை முதல் எண்ணூர் வரை 4-வது இரயில் பாதை அமைப்பதற்காக 12516 சதுர மீட்டர் நிலத்தை கையகப்படுத்த தெற்கு ரயில்வே துறையில் நிலத் திட்ட அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது திருத்தப்பட்ட நிலத் திட்ட அட்டவணை 12629 சதுர மீட்டர் பரப்பளவில் பெறப்பட்டு, நிருவாக ஒப்புதல் வழங்குவதற்கான நடவடிக்கை பரிசீலனையில் உள்ளது.

## கொருக்குப்பேட்டை – எண்ணூர் இடையே 3–வது மற்றும் 4–வது இரயில் பாதை அமைக்கும் திட்டம்

இத்திட்டத்திற்காக, 2429 சதுர மீட்டர் நிலப்பரப்பை கையகப்படுத்த அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. ஆனால் கேட்புத் துறை (இரயில்வே) தற்போது திருத்தப்பட்ட

நிலத் திட்ட அட்டவணையை 537 சதுர மீட்டருக்கு சமர்ப்பித்துள்ளது. இந்த கருத்துரு நில நிருவாக ஆணையர் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது.

## அத்தியாயம் – 8

## சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

### 8.1 சாலைப் பாதுகாப்பு

நாட்டில் அதிக எண்ணிக்கையிலான மோட்டார் வாகனங்களைக் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். தற்போது அது 3 கோடியைத் தாண்டியுள்ளது. மேலும், நாட்டின் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது மாநிலத்தில் அதிக வாகன நகர்வுகள் உள்ளன. இதன் விளைவாக அதிக போக்குவரத்து நெரிசல், சாலையில் விபத்துகள் மற்றும் அதிக மாசு ஏற்படுகிறது. சாலைப் பாதுகாப்பில் அரசுப் போக்குவரத்து கழங்களின் பங்கு முக்கியமானதாகும்.

அரசு போக்குவரத்துக் கழகங்களின் மூலம் விபத்து இல்லாத தமிழகத்தை நோக்கி என்ற அரசின் தொலைநோக்கு இலக்கை அடைய போக்குவரத்துத் துறை, போக்குவரத்து ஆணையரகத்துடன் இணைந்து செயல்படுகிறது.

மாநில சாலைப் பாதுகாப்பு ஆணையரகம் மாநிலத்தில் சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

போக்குவரத்து ஆணையர் சாலைப் பாதுகாப்பு ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கள அளவிலான நடவடிக்கைகளை கண்காணித்து சாலைப் பாதுகாப்பு கொள்கைகளை செயல்படுத்துவது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவார்.

**8.2 மாநில சாலைப் பாதுகாப்பு மன்றம்**

தமிழ்நாடு ஏற்கனவே சாலைப் பாதுகாப்பு கொள்கையை நடைமுறைப்படுத்தி அதற்கு மாநில மற்றும் மாவட்ட அளவில் நிருவாக அமைப்பினை ஏற்படுத்தியுள்ளது. சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்ய, உயர்மட்ட சாலைப் பாதுகாப்பு மன்றம் மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களின் தலைமையில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 20 உறுப்பினர்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. இம்மன்றம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடுகிறது.

**8.3 மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழு**

மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் செயல்படுகிறது. அது மாவட்டங்களில் எழும் சாலைப்

பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்கிறது. இக்குழு அந்தந்த மாவட்டங்களில் தேவையான சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இந்த மாவட்ட சாலைப் பாதுகாப்பு குழு மாதம் ஒரு முறை கூடும். இக்குழு சாலைப் பாதுகாப்பை ஊக்கப்படுத்துவதுடன், சாலைகளில் அடிக்கடி விபத்துகள் ஏற்படும் பகுதிகளைக் கண்டறிதல், சாலைகளை பராமரித்தல், ஓட்டுநர்கள் பயிற்சி, விபத்து பகுப்பாய்வு, விளம்பர முயற்சிகள், போக்குவரத்து திட்டமிடல், நெடுஞ்சாலை ரோந்து, பயணிகள் வசதிகள் போன்றவற்றில் சிறப்பு கவனமும் செலுத்துகிறது.

சென்னை நகரைப் பொறுத்தவரையில், சென்னை நகரத்தில் சாலைப் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு சிக்கல்களைத் தீர்க்க சென்னை மாநகர காவல் ஆணையர் தலைமையில் சென்னை மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**8.4 சாலைப் பாதுகாப்பு நிதி**

சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைக்காக போக்குவரத்து / காவல் துறைகளால் சேகரிக்கப்பட்ட இணக்கக் கட்டணம் மற்றும் உடனடி அபராதங்களின் மூலம் கிடைக்கப்பெறும்

நிதியிலிருந்து "சாலைப் பாதுகாப்பு நிதி" அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. சாலைப் பாதுகாப்பு நிதி, உள்துறை செயலாளர் தலைமையில் உள்ள துறைகளுக்கிடையிலான குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. இதற்காக ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கப்படுகிறது.

### 8.5 சாலை விபத்து தரவு மேலாண்மை முறை

சாலை விபத்து தரவு மேலாண்மை முறை என்பது தமிழ்நாடு சாலை கட்டமைப்பு திட்ட நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் ஒரு மென்பொருள் மேலாண்மை முறையாகும். இத்திட்டத்தில் சாலை விபத்துகளின் காரணங்கள் குறித்து பகுப்பாய்வு செய்வதன் அடிப்படையில் அடிக்கடி விபத்து நடக்கும் பகுதிகளைக் கண்டறிந்து அதனை மேம்படுத்திட தகுந்த தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க இயலும்.

இத்திட்டத்தில் காவல் துறையானது சாலை விபத்து அறிக்கை படிவத்தில் தங்கள் துறை தொடர்பான விவரங்களை பதிவேற்றம் செய்து பின்னர் பிற துறைகள் அவரவர் துறைகளின் தகவல்களை பதிவு செய்யும் பொருட்டு உள் (போக்குவரத்து) துறைக்கு அனுப்பி வைக்கிறது.

உள்(போக்குவரத்து)த் துறை மோட்டார் வாகனங்கள் குறித்த விவரங்களை பதிவேற்றம் செய்து நெடுஞ்சாலைத் துறைக்கு அனுப்பி வைக்கிறது. இப்பணிகள் முடிவடைந்த பின்னர் சாலை விபத்து தகவல் மேலாண்மைத் திட்டத்தின் மூலம் பல்வேறு அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

### 8.6 சாலைப் பாதுகாப்பிற்கான தனி நடவடிக்கைகள்

சாலை விபத்துகளைத் தடுக்கவும், விபத்துகளினால் பாதிக்கப்படும் விலைமதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்றவும், சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் கீழ்கண்ட மூன்று முக்கிய பகுதிகளை இலக்காக கொண்டு அரசு செயல்படுகிறது:-

அ) தடுப்பு நடவடிக்கைகள்.

ஆ) பொன்னான நேரத்தில் அவசர சிகிச்சை.

இ) அமலாக்க நடவடிக்கைகள்.

மாநிலத்தில் நிகழும் ஒவ்வொரு அபாயகரமான விபத்துகளையும் பகுப்பாய்வு செய்வதற்காக, காவல் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளைச் சார்ந்த அலுவலர்களை கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு அதிகமாக விபத்து

நடைபெறும் இடத்திற்கு, விபத்து நடைபெறும் நாளிலோ அல்லது மறு நாளோ சென்று பல்வேறு கோணங்களில் ஒரு விரிவான ஆய்வை மேற்கொண்டு பெறக் கூடிய விவரங்களை விரிவாக பகுப்பாய்வு செய்து, குறிப்பிட்ட தகவலை வழங்கி, எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகளைத் தடுக்கத் தேவையான பொருத்தமான நடவடிக்கைகள், தடுப்பு, நிவாரணம் மற்றும் தண்டனைகளை பரிந்துரைக்கும் ஒரு விரிவான அறிக்கையைத் தயாரித்து அளிக்கிறது.

### 8.7 சாலைப் பாதுகாப்பு வாரம்

சாலையை பயன்படுத்துபவரிடையே சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு ஆண்டுதோறும் ஜனவரி மாதத்தில் சாலைப் பாதுகாப்பு வாரம் அனுசரிக்கப்படுகிறது.

சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை உயர்த்துவதற்கும், மாநில போக்குவரத்துக் கழக பேருந்துகளால் ஏற்படும் விபத்துகளை குறைப்பதற்கும் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் சாலை விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்புகள் ஆண்டுதோறும் குறைந்து வருவதை அறிந்துக்கொள்ளலாம்.

சாலை விபத்துகள் ஏற்படுத்தும் காரணிகளான பேருந்துகளின் பகுதிகள், சாலை விபத்து ஏற்பட்ட நேரம், சாலை விபத்து அடிக்கடி ஏற்படும் மாதங்கள், சாலையை பயன்படுத்துவோரின் பிரிவுகள், பாலினம், வயது, ஓட்டுநர்களின் விபத்து வரலாறு மற்றும் அவரது கண்பார்வை பரிசோதனைகள் கண்காணிக்கப்பட்டு தொடர்ந்து ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதன் மூலம் விபத்துகளைக் குறைத்து இறுதியில் அதனை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

சாலை போக்குவரத்து நிறுவனம் ஒரு விபத்து விசாரணை கையேட்டை வெளியிட்டுள்ளது, இது அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகள் குறித்து ஆய்வு செய்வதற்கு வழிகாட்டியாக செயல்படுகிறது.

## 8.8 சாலை விபத்துக்களை குறைப்பதற்கு அரசு போக்குவரத்துக் கழகத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள்

அ) ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கான காலமுறை பயிற்சி, பிற துறைகளுடனான ஒருங்கிணைப்பு மற்றும் சம்பந்தப்பட்டவர்களை ஊக்குவித்தல்.

ஆ) விபத்துக்கள் அதிகமாக நடைபெறும் இடங்களை கண்டறிதல்.

இ) வாகனம் ஓட்டும்பொழுது ஓட்டுநர்கள் கைபேசி உபயோகித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

ஈ) ஓட்டுநர், பேருந்தினை பணிமனையில் ஒப்படைக்கும் போது சுவாசப் பரிசோதனைக் கருவிகளைக் கொண்டு, மது அருந்தியிருப்பவர்களைக் கண்டறிய சோதனைகள் நடத்தப்படுகிறது.

உ) போக்குவரத்துத்துறை மற்றும் அரசு போக்குவரத்துக் கழகங்களின் பறக்கும்படை உதவியுடன் சுவாசப் பரிசோதனைக் கருவிகளைக் கொண்டு, பணியில் மது அருந்தியிருப்பவர்களைக் கண்டறிய திடீர் சோதனைகள் நடத்துதல். மேலும் காவல் துறையின் மூலமும் தொடர் கண்காணிப்பில் ஈடுபடச் செய்தல்.

ஊ) ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் நன்கு ஓய்வு எடுக்கும் வகையில், ஓய்வு அறைகளின் தரம் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.

எ) அடிக்கடி விபத்து ஏற்படும் பகுதிகளை கண்டறிந்து நெடுஞ்சாலைத் துறை, தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் மற்றும் காவல்துறை உதவியுடன் சாலைகளை மேம்படுத்துதல், போக்குவரத்து தொடர்பான அறிவிப்பு பலகைகளை வைப்பது மற்றும் விபத்து ஏற்படும் பகுதிகளில் எச்சரிக்கை

பலகைகளை நிறுவுதல் ஆகியவற்றின் மூலம் விபத்து ஏற்படுவதை தடுத்தல்.

ஏ) விபத்தின்றிப் பணிபுரியும் அரசுப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களை ஊக்குவிக்கும் பொருட்டு முதலமைச்சரின் விருதுகள் வழங்கி ஊக்கப்படுத்துதல்.

ஐ) கடந்த சில ஆண்டுகளில் அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் மூலம் ஏற்படும் விபத்துக்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றன. வாகன விபத்துகளின் விவரங்கள் பின்வருமாறு:-

| ஆண்டு | இயக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை | உயிரிழப்பு ஏற்படுத்திய விபத்துகளின் எண்ணிக்கை | உயிரிழப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2019-2020 (கொரோனாவிற்கு முன்) | 19,290 | 867 | 969 |
| 2020-2021 (கொரோனா காலத்தில்) | 19,290 | 343 | 381 |
| 2021-2022 (கொரோனா காலத்தில்) (ஜீலை 2021வரை) | 19,290 | 113 | 123 |

**முடிவுரை**

தமிழக அரசு, சமூகத்திலுள்ள அனைத்துத் தரப்பு மக்களும் குறைந்த கட்டணத்தில் பேருந்து சேவையினை பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு 1972-ஆம் ஆண்டு பொதுப் போக்குவரத்து பேருந்து முறையை நாட்டுடைமையாக்கி, கடந்த 50 ஆண்டு காலமாக அதனை நடைமுறைப்படுத்தி வருகின்றது. கல்வி, சமூக நடவடிக்கைகள், சந்தை அணுகுதல் மற்றும் தனி மனித பொருளாதார வளர்ச்சியை பெருக்கும் வகையில் வேலைவாய்ப்பினை உருவாக்கிக்கொள்ள கிராமங்களை நகரங்களுடன் இணைக்கும் நோக்கத்துடன் பொதுப் போக்குவரத்து செயல்படுகின்றது.

அனைத்து வகையான போக்குவரத்து வளர்ச்சியானது, பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாக உள்ளது. எனவே, மாநிலத்தில் பொதுப் போக்குவரத்து முறைகளான புறநகர் இரயில், சென்னை மெட்ரோ இரயில், ரயில்வே மற்றும் விமான நிலைய வளர்ச்சிகளுக்கான நடவடிக்கைகளில் போக்குவரத்துத் துறை முக்கிய பங்காற்றுகிறது.

கொரோனா பெருந்தொற்று காலத்திற்கு முன்பிருந்த நிலையை அடைய, பயணிகளின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு அரசு போக்குவரத்துக் கழகங்கள் நடவடிக்கை

மேற்கொள்கின்றன. நடப்பாண்டில், சுற்றுச்சூழலுக்கு ஏற்ற BS-VI இணக்கமான டீசல் பேருந்துகள் மற்றும் மின்சார பேருந்துகள் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்படுவதால், பெருமளவு மாசினை கட்டுப்படுத்தலாம்.

அரசு போக்குவரத்துக் கழக சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் (வெள்ளை பலகை) பெண்கள், திருநங்கைகள் மற்றும் 40% மற்றும் அதற்கு மேலுள்ள மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களின் துணையாளர் ஒருவருடன் இலவசமாக பயணம் செய்யலாமென்று அரசாணை வெளியிடப்பட்டு, இதன் மூலம், பெண்கள் தங்களின் அடிப்படை தேவையான வேலை, கல்வி மற்றும் சமூக நடவடிக்கைகள் போன்றவற்றினை பூர்த்தி செய்துகொள்ள பேருந்துகளில் பயணம் செய்ய ஊக்கப்படுத்தப்படுகின்றனர். அவற்றில் பேருந்து பயணம் செய்பவர்களில் சுமார் 60 சதவீதத்திற்கு மேலானவர்கள் பெண்கள் ஆவர். திறமையான, வசதியான மற்றும் குறைந்த பயணக்கட்டண அளவில், பொதுப் போக்குவரத்தினை அளிப்பதன் மூலம் சூழலுக்கு உகந்த முன்மாதிரி பொதுப் போக்குவரத்து சேவையை அதிகரிக்கலாம் என அரசு கருதுகிறது.

அரசுப் பேருந்துகளில், தொழில்நுட்பங்கள் உபயோகிப்பதின் மூலம் பெண் பயணிகள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்தல், பேருந்து

நிறுத்தத்திற்கு வரும் பேருந்து வருகை நேரத்தை கைபேசி மூலம் அறிந்துகொள்ளுதல், ரொக்கமில்லா பயணச்சீட்டு அமைப்பு, பணிமனை மேலாண்மை அமைப்பு மற்றும் பேருந்து நகர்வினை அறிந்துகொள்ளுதல் ஆகிய நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

போக்குவரத்துக் கழகங்களில் ஏற்பட்டுள்ள நிதிப்பற்றாக் குறையை களைந்து வருவாயினை பெருக்கும் இதர வழிமுறைகளை கண்டறிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பயணக்கட்டணம் அல்லாத வருமானத்தை பெருக்க பணிமனைகளில் வணிக வளாகங்களை ஏற்படுத்துதல், கழகங்களின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களில் ஒரு பகுதியினை பெட்ரோல் / டீசல் விநியோகிக்கும் நிலையங்களாக மாற்றுதல் மற்றும் மின்சார செலவினை குறைக்க, சூரிய சக்தியினால் மின் உற்பத்தி செய்தல் போன்ற வழிகளில் முடியும் என அரசு நம்புகிறது.

விபத்தில்லா தமிழ்நாட்டினை உருவாக்குவது என்ற அரசின் நோக்கத்தினை பூர்த்திசெய்யும் வகையில் சாலை விபத்தினை குறைப்பதற்கு போக்குவரத்துத் துறை உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

உலக பொதுமறையான திருக்குறளின் கருத்துகளை அனைத்து அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் மூலம்

கொண்டு செல்லுதல் மற்றும் இத்துறையில் அனைத்து நிலைகளிலும் தமிழ் பயன்பாட்டினை உறுதிசெய்தல்.

அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பயணக் கட்டணத்தில், பொது மக்களின் பயன்பாட்டிற்கு சேவை வழங்குவதில் பொதுப் போக்குவரத்து முதன்மை பங்காற்றவும், தமிழ்நாட்டில் உள்ள கடைகோடிப் பகுதிகளை இணைப்பதற்கும், இதர பொதுப் போக்குவரத்து முறைகளை ஊக்குவிக்கவும் அரசு முயற்சிக்கும்.

**ஆர். எஸ். ராஜகண்ணப்பன்**

**போக்குவரத்துத் துறை அமைச்சர்**

*********

**புத்தகத்தில் உலகைப் படித்தால் அறிவு செழிக்கும்...**

**உலகத்தையே புத்தகமாய் படித்தால் அனுபவம் தழைக்கும்...**

**- மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர்**

**கலைஞர் மு. கருணாநிதி**

*********

## இணைப்பு

## மானியக் கோரிக்கை எண். 48

## போக்குவரத்துத் துறை

## திருத்திய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2021-2022

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | துறை தலைமையகம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | 2,811,79,96 | 2,167,48,81 | 451,70,01 | 5,430,98,78 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 65,65,05 | ------ | ------ | 65,65, 05 |
| | **மொத்தம்** | **2,877,45,01** | **2,167,48,81** | **451,70,01** | **5,496,63,83** |




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 26.07.2021 அன்று தலைமைச் செயலகத்தில், போக்குவரத்துத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஆர். எஸ். ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், போக்குவரத்துத் துறை சிறப்புச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடம் 07.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில், கொரோனா நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு அரசு அனைத்து போக்குவரத்து கழகப் பணியாளர்களின் ஒரு நாள் சம்பளத் தொகையான 14 கோடியே 46 இலட்சத்து 70 ஆயிரத்து 635 ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஆர். எஸ். ராஜகண்ணப்பன், அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வின் போது, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் அரசு போக்குவரத்துக் கழக உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 02.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில், த.அ.போ. கழகங்களில் பணியாற்றி ஜனவரி 2020 முதல் ஏப்ரல் 2020 வரையில் ஓய்வு பெற்ற 2,457 போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய ஓய்வூதிய பணப் பயன்களின் நிலுவைத் தொகையான ரூ.497.32 கோடியினை வழங்கிடும் அடையாளமாக, 6 நபர்களுக்கு காசோலைகளை வழங்கினார்கள். இந்த நிகழ்வின் போது, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஆர். எஸ். ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



07.07.2021 அன்று சென்னை போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவன அலுவலகத்தில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஆர். எஸ். ராஜகண்ணப்பன் அவர்கள் போக்குவரத்துத் துறையினை சீரமைப்பது மற்றும் பட்ஜெட்டில் இடம் பெற வேண்டிய புதிய திட்டங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்கள். உடன் போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை சிறப்பு செயலாளர் திரு. சி. நடராசன், இ.ஆ.ப., மற்றும் அரசு போக்குவரத்துக் கழக உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் திரு. ஆர். எஸ். ராஜகண்ணப்பன் அவர்கள் 21.06.2021 அன்று மாநகர் போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில் இயக்கப்படுகின்ற மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் உரிய முறையில் கிருமிநாசினி மூலம் சுத்தம் செய்யப்படுகின்ற பணியினை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள். அந்நிகழ்வின்போது, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., மற்றும் போக்குவரத்துக் கழக உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, 17.07.2021 அன்று மாண்புமிகு ஊரக தொழிற்துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன் தலைமையில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஆர். எஸ். ராஜகண்ணப்பன் அவர்கள் நங்கநல்லூர் மற்றும் அய்யப்பன்தாங்கல் பேருந்து நிலையங்களில் 12 புதிய / பழைய வழித்தடங்களில் 17 பேருந்துகள் இயக்கத்தினை துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்வின்போது திரு. ஆர். எஸ். பாரதி, எம்.பி, மற்றும் அரசு போக்குவரத்துக் கழக உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, 12.08.2021 அன்று சென்னை சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில், புதிய / பழைய வழித்தடங்களுக்கான 23 பேருந்துகள் இயக்கத்தினை மேற்கு சைதாப்பேட்டையில், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ஆர். எஸ். ராஜகண்ணப்பன் அவர்கள் மற்றும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் ஆகியோர் துவக்கி வைத்தனர். இந்நிகழ்வின்போது அரசு போக்குவரத்துக் கழக உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் பேருந்து நிலையத்தில் 29.07.2021 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ஆர். எஸ். ராஜகண்ணப்பன் அவர்கள் அரசுப் பேருந்து புதிய வழித்தடங்களை துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சியர் அவர்கள் மற்றும் அரசு போக்குவரத்துக் கழக உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் அரசு பேருந்து இயக்கத்தினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு அமைச்சர் திரு. எஸ். ரகுபதி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ஆர். எஸ். ராஜகண்ணப்பன் ஆகியோர் 20.08.2021 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சியர் அவர்கள், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். வை. முத்துராஜா அவர்கள், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். சின்னத்துரை அவர்கள் மற்றும் அரசு போக்குவரத்துக் கழக உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.